Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 29 (05.12.2002) வியாழக்கிழமை இதழ் : 65

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
☎ 021-2225170

# தனித்துவமான சுயாட்சித் திட்டமே இறுதித் தீர்வாக முன்வைக்கப்படும்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஒஸ்லோவில் பேச்சு


(ஒஸ்லோ)

**தற்போது நடைபெறும் பேச்சுக்களில் கனடா உள்ளிட்ட பல நாடுகளின் சுயாட்சி அமைப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டாலும், இலங்கைக்கே உரியதான தனித்துவமான சுயாட்சித் தீர்வுத் திட்டமே தயாரிக்கப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஒஸ்லோவில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களில் அரச தரப்புக் குழுவுக்கு தலைமை தாங்கும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் பல்லினச் சமூகக் கட்டமைப்புக்கு ஏற்றவாறு - தனித்துவமான சுயாட்சித் திட்டமே முன் வைக்கப்படும் எனவும் தெரிவித்த அவர்,

இலங்கையின் இனப்பிரச்சினையைச் சமாதான வழி மூலம் தீர்ப்பதற்கான முக்கிய புள்ளியொன்றை தாம் எட்டியுள்ளதாகவும், தமக்கிடையே பெரும் இடைவெளிகள் காணப்பட்டாலும் அவை காலப்போக்கில் குறுகி விடும் என்றும் அவர் தெரிவித்தார்.



நோர்வே வெளிவிவகார அமைச்சருக்குக் கைலாகு கொடுக்கும் கலாநிதி பாலசிங்கம், அருகில் தமிழ்ச்செல்வன்.

## கனேடிய அரசியல் நிபுணர்களுடன் பாலா ஒன்றரை மணிநேரம் பேச்சு!

ஒஸ்லோவில் நேற்று சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கனேடிய அரசியலமைப்பு நிபுணர்களுடன் பேச்சுக்களை நடாத்தினார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தப் பேச்சுக்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தன.

இப்பேச்சுக்களின்போது கனடாவின் அரசியலமைப்பு குறித்தும் அங்குள்ள சுயாட்சி குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பேச்சுக்களில் கனடாவைச் சேர்ந்த மூன்று அரசியலமைப்பு நிபுணர்கள் கலந்துகொண்டனர். இவர்கள் நேற்றுமுன்தினம் சமாதானப் பேச்சுக்களின்போது அரச - புலிகள் தரப்புக்கு கனடிய சுயாட்சி முறைகள் குறித்து விளக்கமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வுக்கான நெகிழ்வுக் கட்டமைப்பு பேச்சுக்களில் இலக்காக இருந்தது!

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிக்கின்றார்

(ஒஸ்லோ)

அரசியல் தீர்வுக்கான நெகிழ்வான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் இலக்குடன் ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சுக்கள் அமைந்ததாக, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலாசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கும்போது -

ஒஸ்லோவில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் முன்னேற்றகரமானவையாக தொடர்வதாகவும், அமைதிக்கான இறுதித் தீர்வு நோக்கிய முன்னேற்றத்தில் நம்பிக்கை தென்படுவதாகவும் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் தீர்வுக்கான முயற்சியில் புலிகள் – அரசு ஒரே பாதையில்!

### ஜப்பானில் ரணில் விக்கிரமசிங்க

(ரோக்கியோ)

அரசியல் தீர்வுக்கான நகர்வுகளில் அரச தரப்பும், புலிகள் தரப்பும் வெவ்வேறான பாதைகளில் செல்லவில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய நம்பிக்கை ஒளி தென்படுகின்றது. இது தோல்வியடைய நாம் விடமாட்டோம். விடுதலைப் புலிகளுடன் இணைந்து அமைதியை ஏற்படுத்த தமது அரசாங்கம் அர்ப்பணிப்பை மேற்கொண்டு வருவதாகவும்,

அமைதியும் அபிவிருத்தியும் ஒன்றாக இணைந்து செயற்படுத்தப்பட்டாலே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

### விண்ணாணம் விநாசியர்



ஒஸ்லோவில போய் ஒட்டாவாவுக்கு கையெழுத்திடச் சொல்லுற தேரர் வலு விசயகாரர்தான்...

## பாதுகாப்பு உபகுழுவில் மேலும் இருவர்; புலிகள் தரப்பிலிருந்து கௌசல்யன்!

(ஒஸ்லோ)

பாதுகாப்பு உபகுழுவின் பணிகளை இலகுபடுத்துவதற்காக இரண்டு தரப்புக்களிலும் உறுப்பினர் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு உபகுழுவில் நிலவுகின்ற ஆட்பற்றாக்குறையைத் தீர்த்து, குழுவின் செயற்பாடுகளை விரிவுபடுத்தவே இரு தரப்பிலும் தலா ஒவ்வொருவரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் புலிகள் தரப்பு, மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை தடைசெய்யும் 'ஒட்டாவா' உடன்பாட்டில் அரசும் கையெழுத்திடுக!

# 11 லட்சம் பேரிடம் திரட்டிய கையெழுத்துக்களுடன் ஒஸ்லோவில் புண்ணியசார தேரர் மனு சமர்ப்பிப்பு!

(ஒஸ்லோ)

வவுனியாவைச் சேர்ந்த றம்புக்வல புண்ணியசார தேரர் - கண்ணிவெடிகள், மிதிவெடிகளை தடைசெய்யும் 'ஒட்டாவா' உடன்படிக்கையில் அரசாங்கம் கையெழுத்திட வேண்டும் எனக் கோரி, 11 லட்சம் மக்களின் கையெழுத்துக்களுடனான மனுக்களை ஒஸ்லோவில் வைத்து அமைச்சர் ஜி.எல்.பீரிசிடமும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடமும் நேற்று நேரில் கையளித்தார்.

நேற்றைய பேச்சுக்கள் முடிவடைந்தபோது - பேச்சுக்கள் நடைபெறும் ரடிஷன் ஹோட்டலின் 32 ஆவது மாடிக்கு வந்த தேரர், இருவரிடமும் நேரடியாக தனது மனுக்களை கையளித்தார்.

மனுவை ஏற்றுக்கொண்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - கண்ணிவெடி அகற்றுதல் போன்ற மனிதாபிமானப் பணிகளில் மதங்கள் சார்ந்தோரும் ஈடுபடுவதை வரவேற்கிறோம்.

கடந்த காலத்தில் இரண்டு மில்லியன் கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் வட-கிழக்கில் விதைக்கப்பட்டுள்ளன. இதனால் விளைநிலங்கள், மக்களின் குடிமனைகள் என்பன பயன்படுத்த முடியாதவையாகி பாழடைந்து போய்க் கிடக்கின்றன.

எமது பகுதிகளில் இயங்கும் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மட்டும் ஒரு இலட்சம்

(12ஆம் பக்கம் பார்க்க)

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
SERENDIB
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# ஐ.நா. முகவரக ஊழியர்களுக்கு இஸ்ரேலியப் படைகளால் ஆபத்து!

(காஸா)

ஐக்கிய நாடுகள் முகவரகங்களின் ஊழியர்களின் உயிர்களுக்கு இஸ்ரேலியப் படையினரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. ஊழியர்கள் மனுச் செய்துள்ளனர்.



கொல்லப்பட்ட ஐ.நா. அலுவலரின் அடையாள அட்டை

இரண்டு வாரங்களிற்கு முன்பு பிரித்தானியாவைச் சேர்ந்த- ஐக்கிய நாடுகள் முகவரக ஊழியர் இஸ்ரேலிய இராணுவத்தினரால் மேற்குக்கரை நகரில் வைத்துக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஐ.நா. ஊழியர்கள் செய்த மனுவில் தமது பணிகளுக்குக் கடந்த இரண்டு வருடங்களில் பாரிய அச்சுறுத்தல்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் தமக்கு ஏற்படுத்தியதாகத் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களே இவ்வாறான கொலை அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இதனைவிட ஐ.நாவின் வாகனங்கள் மற்றும் கட்டடங்களையும் இஸ்ரேலிய இராணுவத்தினர் அழித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கென்யாவில் தாக்குதல்கள் நடக்கலாம் என இஸ்ரேலிய புலனாய்வுத்துறை எச்சரித்திருந்தது


(காஸா)

இஸ்ரேலிய இராணுவப் புலனாய்வுத்துறையினர், கென்ய இரட்டைத்தாக்குதல் பற்றி - தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பே அந்நாட்டு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அல்-கெய்டா அமைப்பின் அச்சுறுத்தல் கென்யாவிற்கு இருப்பதாக இஸ்ரேலிய இராணுப் புலனாய்வுத்துறையினர் எச்சரித்திருந்தபோதும் கென்யா அரசாங்கம் அதனை அசட்டை செய்திருந்தது.

இதேவேளை - பத்து வெளிநாட்டவர்களின் படங்களை கென்ய உள்ளூர் பத்திரிகையில் சந்தேகநபர்கள் என்ற அடிப்படையில் கென்யப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

கென்யாவில் தாக்குதல் நடைபெறும் என்று பொதுவான தகவல் கிடைத்தபோதும், இஸ்ரேலிய இலக்குகள் தாக்கப்படும் என்ற தகவல் தமக்குக் கிடைக்கவில்லை என கென்யா கூறியுள்ளது.

உலகவலம்

# அமைச்சர் பதவியில் இருந்து ஜனாதிபதி முடிந்தால் நீக்கட்டும்

## அமைச்சர் ஹக்கீம் சவால்

அமைச்சர் பதவியில் இருந்து ஜனாதிபதி முடிந்தால் தன்னை நீக்கிப் பார்க்கட்டும் எனச் சவால் விடுத்துள்ளார் - கிழக்கு அபிவிருத்தி, துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

ஒஸ்லோவிலிருந்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரசுக்குள் பிளவினை ஏற்படுத்தி அதைக் கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை உருவாக்குவதற்கு சிலர் முனைகின்றனர். இதனைத் தேசிய அளவிலான பிரச்சினையாக மாற்றுவதற்கும் சிலர் முனைகின்றனர்.

இந்தச் சம்பவங்களின் பின்னால் மறைமுகச் சக்திகள் இருக்கின்றன. இது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்வீட்டுப் பிரச்சினையல்ல. நாட்டையே அபாயத்துக்குள் தள்ளிவிடக் கூடிய சதி முயற்சியே இது.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் உள்ள மறைமுக சக்தி குறித்து விரைவில் தெரியவரும். முஸ்லிம் காங்கிரஸை திட்டமிட்டு பலவீனப்படுத்த எடுக்கும் இம்முயற்சிக்கும், நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக வெளியாகும் செய்திகளுக்கும் தொடர்புகள் இருக்கின்றன.

யுத்தத்தை உருவாக்குவதற்கும் நாட்டைச் சீரழிப்பதற்கும் இந்தச் சக்திகள் முனைகின்றன. இன்னும் சில நாட்களில் இந்தச் சக்திகளை நாடு முழுவதும் தெரிந்துகொள்ளும் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

புலோலி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கூட்டுறவாளர்
அமரர் வீரசிங்கம்
அவர்களை நினைவுகூர்வதுடன்
எமது சங்கம், முன்னர் இயங்கி
வந்த வாகன சுத்திகரிப்பு
நிலையத்தைப் புனரமைத்து
சிறப்பான சேவையைச் செய்து
வருகிறது என்பதை
அறியத்தருகின்றோம்.
(சி-275)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்
கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கொள்கை வழிநின்ற கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 37ஆவது ஆண்டு ஞாபகார்த்த தினத்தை எல்லோரும் நினைவு கூர்வோமாக.
(சி-274)

IEECD
121/1, அரசடி வீதி, கந்தர்மடம்
கல்வியாண்டு 2003
இன்று ஆரம்பமாகிறது.
ஆங்கிலம்
Gr. 6 - G.11
பொது ஆங்கிலம்
A/L 2004/05
Mr.K.RAMANATHASAN
(கையேடு, மாதாந்தப் பரீட்சைகள்)
(சி-276)

நிறைஞ்சனாஸ் சங்கானை
வண்டமி நடித்த
BLACK EAGLE
11.00, 2.45, 6.00, 7.45
6ஆம் திகதி முதல்
நேருக்கு நேர்
(சி-187)

ராஜா
யாழ்ப்பாணம்.

நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

# கிழக்குத் திமோர் கலவரத்தில் ஏழு பொதுமக்கள் பலியாகினர்!



கிழக்குத் திமோரில் இரண்டு நாட்களாக நடைபெற்ற கலவரத்தில் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் டிலியிலுள்ள விடுதிகள், கடைகள் அழிக்கப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியாவிற்குச் சொந்தமான நவீன சந்தையொன்றும் அழிக்கப்பட்டுள்ளது. 500 இளைஞர்களைக் கொண்ட கும்பல் இத்தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிய வருகின்றது.



அமைதியாக நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதினாலேயே கலவரம் ஆரம்பமாகியது. ஆர்ப்பாட்டப் பேரணியில் அறுபது துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இத்துப்பாக்கிச் சூடுகள் கும்பலிலிருந்தா, இராணுவத்திடமிருந்தா சுடப்பட்டது தெரியவில்லை என செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்குத் திமோர் புதிய குடியரசாக உருவாகியதன் பின்னர் நடைபெறும் பெரிய கலவரம் இதுவாகும்.

# 95 வயது மூதாட்டியைக் கொன்ற இஸ்ரேலியப் படையினர்!



மேற்குக்கரை நகரான ரமளாவில் 95 வயதுடைய மூதாட்டியை இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். மூதாட்டி வைத்திய சாலைக்குக் காரில் செல்லும்போது காரின் பின் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இண்டிப்பற்றா இயக்கம் ஆரம்பிதது 26 மாதங்களின் பின்னர் சுட்டுக்கொலலப்பட்ட மிகக் கூடிய வயதுள்ள நபர் இவராவார்.

மேற்படி சம்பவத்திற்கு இஸ்ரேலிய இராணுவத்தினர் - தாம் காரினை மறித்தபோது நிறுத்தாமல் மூடப்பட்ட வீதியில் வாகனம் விரைந்து சென்றமையாலேயே சுட்டதாகத் தெரிவித்துள்ளனர். இம்மூதாட்டியுடன் சென்ற இரு பெண்களும் படுகாயமடைந்தனர்.

# இன்றைய நாள் இனிய நாள்

## 05-12-2002 - வியாழக்கிழமை

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மாதம் - 19ஆம் திகதி**

*திதி* - பூர்வ பட்ச பிரதமை - பகல் - 12.11 வரை அதன் மேல் துதியை.

*நட்சத்திரம்* - கேட்டை - மு.ப - 12.11 வரை அதன் மேல் மூலம்.

*ராகுகாலம்* - 1.46 - 3.16

*சுபநேரம்* - 7.46 - 9.16

**மேடம்** :- மனஅமைதி, புதிய முயற்சியில் ஈடுபடுவது தவிர்க்கவும், பிதாவுடன் நல்லுறவு, தெய்வ வழிபாடு, கல்வி சமநிலை, வியாபாரச் சமநிலை

**இடபம்** :- சுபமங்கள வைபவங்களில் பங்கு, மரியாதை, உறவினர் நண்பர்கள் உறவு, மனச்சோர்வு, தெய்வ வழிபாடு, கல்விச் சமநிலை, வியாபாரச் சமநிலை.

**மிதுனம்** :- மன மகிழ்ச்சி, சுபமங்கள வைபவங்களில் பங்கு, அறுசுவையுண்டி, ஆடையாபரணபலன், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- புத்திரர் மகிழ்ச்சி, பொதுச் சேவை மதிப்பு, பணவரவு, நோய் நீக்கம், புதிய கடன் வசதி, கல்விச் சமநிலை, வியாபாரச் சமநிலை.

**சிங்கம்** :- பெண்கள் சுகயீனம், வாகனச் செலவு, உறவினரால் செலவு, புத்திரர் மகிழ்ச்சி, சமூகசேவை, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- மனோவலிமை, காரிய சித்தி, கொடுக்கல் வாங்கல் சிக்கல், மாதா சுகக் குறைவு, வீண் அலைச்சல், வீட்டில் திடீர்ச் செலவு, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவாதம், மனச் சஞ்சலம், மனோதிடம், செய்தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபாரச் சமநிலை.

**விருச்சிகம்** :- சுபமங்கள வைபவங்களில் பங்கு, பணவரவு, நாவிற்கு ருசியான உணவு, சேமிக்கும் சிந்தனை இல்லை, கல்விச் சமநிலை, வியாபார சமநிலை.

**தனு** :- கர்வநிலை, வாக்குவாதம், வீண்செலவு, சுபமங்கள வைபவங்களில் பங்கு, உறவினர் நண்பர்கள் உறவு, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- செய்தொழில் முன்னேற்றம், பெண்கள் மகிழ்ச்சி, சுபமங்கள வைபவங்களில் பங்கு, மற்றவர்களை மதியாத மனநிலை, உடனலக்குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், சமூகசேவையில் மதிப்பு, சுபமங்கள காரியங்களில் பங்கு, நல்லோர் உறவு, அறுசுவையுண்டி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**மீனம்** :- பிதாவுடன் நல்லுறவு, தெய்வ வழிபாடு, சமயநூல், பாராயணம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், சமூகசேவையில் மதிப்பு, சுப காரியங்களில் பங்கு, கல்விச் சமநிலை, வியாபாரச் சமநிலை.

# அரசு - புலிகள் இணைந்து வட - கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்ற இணக்கம்!

## ஒஸ்லோப் பேச்சுக்களில் முடிவு எட்டப்பட்டது

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் அரசாங்க - புலிகள் தரப்பினருக்கிடையில் நடைபெறும் பேச்சுக்களின் முதலாவது நாளில், வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வட-கிழக்குப் பகுதிகளில் லட்சக்கணக்கான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை முழுமையாக அகற்றினால்தான் அப்பகுதிகளில் மக்களை முழுமையாக மீளக்குடியமர்த்த முடியும்.

இந்த விடயத்தில் அரசதரப்பும் புலிகளும் இணைந்து கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதென ஒஸ்லோ பேச்சுக்களின் முதலாவது நாளில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ் இணக்கத்தின் அடிப்படையில் இருதரப்பும் இணைந்து கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான திட்ட வரை முறைகள் விரைவில் தயாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### குளத்தில் மூழ்கி மரணம்

குளத்தில் நீந்திய வேளையில் தாமரைக் கொடியில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக் கிழமை துனணாலை தாமரைக் குளத்தில் இடம் பெற்ற இச்சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் விந்தன் (வயது 25) என்பவரே மரணமடைநதவராவார்.

### ஊடகவியலாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தின் அலுவலகத்தில் இன்று மதியம் 2 மணிக்கு மேற்படி சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில் முக்கிய பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்குபறறுமாறு யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவா அழைத்துள்ளார்.

### புலிகளுக்கு புகைப்படம் பிடித்ததாக

## தடுத்து வைக்கப்பட்டிருந்தவரை உயர் நீதிமன்றம் விடுவித்தது!

(கொழும்பு)

புலிகள் இயக்கத்துக்காக புகைப்படம் பிடித்தது எனப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரை உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கறுப்பையா தவராசா என்பவரே தனது கைதுக்கு எதிராக நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வவுனியா விசேட புலனாய்வுப் பொறுப்பதிகாரி, பொலிஸ்மா அதிபர் உட்பட 4 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினரின் அனுமதியின் பேரிலேயே புகைப்படங்கள் எடுத்ததாகவும், காரணமின்றி கைது செய்தது சட்ட விரோதம் என்றும் மனுவில் இவர் குறிப்பிட்டிருந்தார்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த வழக்கிலேயே, குறித்த இளைஞரை விடுவிக்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

## நிதிப்பொறிமுறைகள் குறித்து ஒஸ்லோவில் இறுதி முடிவு!

### நோர்வே பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நடைபெற்று வரும் அரசு - புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுக்களில் நிதியுதவிகள் தொடர்பான பொறிமுறைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிதியைப் பெறுவது, பயன்படுத்தல் மற்றும் திட்டங்களைத் தயாரிதல், இணைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பொறிமுறை அமைந்திருக்கும். இது குறித்து இந்தப் பேச்சுக்களில் இறுதி முடிவு எடுக்கப்படும.

இந்தப் பேச்சுக்களின் போது நிதிப்பயன்பாடு குறித்து இரு தரப்பும் தத்தமது திட்டங்களை முன வைக்கும். நிதி, வட - கிழக்குப் பகுதிகளுக்கு மாத்திரமன்றி முழு நாட்டுக்கும் பகிரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தபால் திணைக்களத்தில் 100 பேருக்கு அடுத்த வருடத்தில் நியமனம் கிடைக்கும்!

(கொழும்பு)

தபால் திணைக்களத்தில் நிலவிவரும் வெற்றிடங்களுக்கு நூறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இந்நியமனங்கள் செய்யப்படவுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் நிலவிவரும் வெற்றிடங்களினால் தபால் சேவையை நடாத்துவதில் திணைக்கள அதிகாரிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தியாவசிய சேவையான தபால் சேவையை மக்களுக்கு வழங்குவதில் ஆள்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்து வருவதாக திணைக்கள அதிகாரிகள் வலியுறுத்தி வந்தனர். புதிய நியமனங்களை வழங்குவது, அமைச்சிடம் இருந்து வந்த நிதி நெருக்கடியினால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அடுத்த ஆண்டிற்கான நிதியிலிருந்து, சுமார் நூறு பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இதற்காக இவ்வருட நடுப்பகுதயில் தபால் சேவர்களாக கடமையாற்றியவர்களை தரம் உயர்த்துவதற்காக போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது. இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுககே இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (ச)

## ஊடக சுதந்திரம் பற்றிப் பேச பொ.ஐ.முன்னணிக்கு அருகதையில்லை

### அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன கூறுகிறார்

ஊடகச் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ, ஜே.வி.பிக்கோ எந்த அருகதையும் கிடையாது



என அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது ஆட்சிக் காலத்தில் ஊடகங்களை நசுக்கியும், அரச ஊடகங்களை தமது கட்சிப் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தியும் வந்த பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஊடக சுதந்திரம் குறித்து பேசுவதற்கு எந்தத் தகுதியும் கிடையாது.

கட்சிப் பிரச்சாரங்களுக்கு ஏரிக்கரைப் பத்திரிகைகளையும், அரச ஒலிபரப்பு, ஒளிபரப்பு சாதனங்களையும் பொ.ஐ.மு.பயன்படுத்தியிருந்தது. அரச தொலைக்காட்சியான ரூபவாஹினிக்கு மட்டும் மூன்றரைக் கோடி ரூபாவை பொ.ஐ.மு. இன்னமும் செலுத்த வேண்டியிருப்பதாக அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## எயிட்ஸ் நோயினால் இதுவரை 99பேர் இலங்கையில் மரணம்!

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் இதுவரை 99 பேர் இறந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எச்.ஐ.வி.வைரஸினால் பாதிக்கப்பட்ட 850 பேர் இங்கு உள்ளதாகவும், சுகாதாரத் திணைக்கள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

84.9 வீதமான பாதிப்புக்கள் ஆண் பெண் உறவு மூலமும், 13.9 வீதமானோருக்கு ஓரினச் சேர்க்கையாலும், 1.6 வீதமானோருக்கு ஊசி ஏற்றல் மூலமாகவும் எயிட்ஸ் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர் உலகில் 40 இலட்சம் பேர் உள்ளனர் என்று மதிப்பீடுகளில் இருந்து தெரியவருகின்றது.

## எட்டு மணித்தியாலங்கள் இன்றைய பேச்சுக்கள் நீடிக்கும்

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நடைபெற்று வரும் அரச - புலிகள் தரப்பு பிரதிநிதிகள் குழுக்களிடையேயான பேச்சுக்கள் இன்று எட்டு மணித்தியாலங்கள் இடம்பெறலாம் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் தீர்வு தொடர்பாக நீண்ட விவாதங்கள் இடம்பெறுவதாலேயே பேச்சுக்கள் நடைபெறும் நேரம் நீடிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒஸ்லோ பேச்சுக்களின் இறுதி நாளான நாளை நான்கு மணி நேரம் பேச்சுக்கள் நடைபெறும். இதையடுத்து இருதரப்பும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணக் குடாநாட்டு மின்சார அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ரூ. 28 கோடி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மின்சார சேவையை சீர் செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி 279 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதனை அடுத்து, யாழ்.குடாநாட்டில் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்ட பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க மின்சாரசபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் முதற் கட்டமாக நீர்வேலி, புத்தூர், உரும்பிராய், நவக்கிரி, அளவெட்டி தெற்கு, அராலி ஆகிய பகுதிகளில் மின் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னமும் மின்சாரம் வழங்கப்படாத வலிகாமம் கிழக்குப் பகுதிகளுக்கு மின்வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

யுத்தத்தினால் சேதமைடைந்த தென்மராட்சி பிரதேசத்திற்கு அடுத்த வருட முற்பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடு வருகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் முதற் கட்டமாக- கைதடி, மட்டுவில், சாவகச்சேரி, அரசடி, மீசாலை, கொடிகாமம் பகுதிகளுக்கு மின்சார வசதி வழங்கப்படவுள்ளது. அடுத்த கட்டமாக தென்மராட்சி பிரதேசத்தின் ஏனைய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவிருக்கின்றது.

இப்பகுதிகளில் 24 மணிநேர மின்சாரம் வழங்குவதற்கு முன்னதாக- மீசாலை, சாவகச்சேரி நகர், கொடிகாமம் பகுதிகளுக்கு ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ச)

### பளையில் தையல் பயிற்சி நிலையம்

(பளை)

பளைப் பிரதேசத்தில் உள்ள யுவதிகளுக்கு தையல் பயிற்சியை வழங்கும் நோக்குடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் பிரமாண அடிப்படையிலான நிதித் திட்டத்தின் கீழ், பளை பிரதேச செயலகத்தால தையல் பயிற்சி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திறப்பு விழாவில் கிளிநொச்சி உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேசசபைச் செயலாளர், அரசியற்துறையினர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (115)

## கட்டார் நாட்டின் விமான சேவை பலாலி வரை விஸ்தரிக்கப்படலாம்

(கொழும்பு)

கட்டார் நாட்டு விமானசேவை நிறுவனம் தனது விமானங்களை பலாலி விமானநிலையம் வரை நீடிப்புச் செய்வதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போது கட்டுநாயக்க விமான நிலையம் வரை சேவையில் ஈடுபட்டு வரும் இந்த விமானங்களை பலாலி விமானநிலையம் வரை விஸ்தரிக்க இந்நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதற்கான ஆரம்பகட்ட ஒழுங்குகளை இந்நிறுவனம் செய்துள்ளது.

தமது விமானங்களைப் பலாலி வரை சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் அனுமதிக்குமானால் அதற்குப் பிரதியீடாக கட்டுநாயக்க மற்றும் பலாலி ஆகிய விமான நிலையங்களை அபிவிருத்தி செய்யத் தயாராக இருப்பதாகவும் கடடார் விமான நிலையம் அரசிடம் தெரிவித்துளளது.

ஐந்து நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 9 ஆம திகதி நாடு திரும்பியதும் இது குறித்த இறுதி முடிவு எடுக்கபபடவுள்ளது.

### ரமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.03 |
| சுபஹ் | 5.18 |
| உதயம் | 6.39 |
| லுஹர் | 12.32 |
| அஸர் | 3.54 |
| ம.்ரிப் | 6.24 |
| இஷா | 7.38 |

# வட பகுதி புனரமைப்புக்கு முன்னோடியாக ஹபரணையில் அதிகாரிகளுக்கு பயிற்சி!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு, மீள் குடியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முன்னோடியாக இப்பணிகளுக்காக அரச அதிகாரிகளைத் தயாராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட வேலைப் பட்டறை ஒன்று கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஹபரணையில் நடைபெற்றது.

இவ்வேலைப்பட்டறையில் வட பகுதியின் அரச அதிபர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் பங்குபற்றியுள்ளனர். அமைச்சர் ஜெயலத ஜெயவர்த்தன மேற்படி வேலைப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். அனைத்து அரச அதிகாரிகளும் பல பாரிய செயற்திட்டங்களைச் செய்வதற்கு தயாராக இருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

(க)

# தென்னைச் செய்கையாளர்கள் உரமானியத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள தென்னஞ் செய்கையாளர்களுக்கு உரமானியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி உரமானியத்தை பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகளிடமிருந்து தென்னை அபிவிருத்திச் சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதற்காக விண்ணப்பம் செய்வதற்கான இறுதித்திகதி இம்மாதம் 15 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# மிதிவெடியில் சிக்கி இளைஞன் காலிழப்பு

## தாளையடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் மிதிவெடியில் சிக்கி இளைஞன் ஒருவன் வலது கால் பாதத்தை இழந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில், தாளையடியைச் சேர்ந்த செல்லத்துரை செந்தூர்நாதன் (வயது 19) என்ற இளைஞனே காலை இழந்தவராவார்.

முன்னர் இராணுவத்தினரால் கட்டுப்பாட்டிலிருந்த வத்திராயன் பகுதிக்கு இவ்விளைஞன் சென்றபோதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மிதிவெடியில் காலை இழந்த மேற்படி இளைஞன் முகமாலைச் சோதனைச் சாவடி ஊடாக செஞ்சிலுவைச் சங்க வாகனத்தின் உதவியுடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் சுமார் ஆறு மணி நேரத்தின் பின் அனுமதிக்கப்படார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இப்பகுதியில் யுத்தத்தினால் சேதமடைந்த வைத்திய சாலை மீள இயக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் சிகிச்சைகளை பெறுவதில் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(60,ச)

# பின்தங்கிய பகுதி அபிவிருத்திக்கு அடுத்த வருடம் திட்டம் வகுக்குக!

## உயர் மட்ட புனரமைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

(மானிப்பாய்)

தென்மராட்சியின் வரணி, தாவளை, இயற்றாலை ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகள் கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் இருப்பது குறித்து வடக்கு - கிழக்கு மாகாண உயர் மட்ட புனரமைப்புக்குழு கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மேற்படி வீதிகளை இனங்கண்டு, சம்பந்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் காலகட்டங்களில் இத்தேவை பற்றி ஆராய முன்வரவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

செல்வாக்கு மிகுந்தவர்கள் வதியும் வீதிகள் திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும், அதேவேளை அவசியமாகத் திருத்தப்பட வேண்டிய வீதிகள் செல்வாக்குள்ளவர்களால் தடுக்கப்படுவது குறித்தும் ஆராயப்பட்டது.

இதேவேளை- வரணி, இயற்றாலை, தாவளைப் பகுதி உள்ளிட்ட கிராமப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாததால், அப்பகுதி மக்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இருளில் வாழ்வை ஓட்டிவருவதும் கவனத்தில் எடுக்கப்பட்டது.

அடுத்து வரும் 2003 ஆம் ஆண்டில் - திட்டமுன்மொழிவுகள் முன்வைக்கப்படும்போது உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்கள் இதுவரை இனங் காணப்படாததும், பின்தள்ளப்பட்டுள்ளதுமான இடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில் திட்ட வரைபுகள் முன்வைக்கப்படல் வேண்டுமெனவும், திருகோணமலை புனரமைப்புக்குழு கூட்டத்தில் வைத்துப் பிராந்திய ஆணையாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோருக்கு எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(100)

# கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவு தின நிகழ்வு!

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை நடாத்தும் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 37 ஆவது நினைவு தின விழா இன்று காலை 10 மணிக்கு - வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் லயன் சமரசிங்கவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் பெ.கனகசபாபதி, சு.கணேசமூர்த்தி பெ.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நினைவுப் பேருரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

# யாழ்.மாநகரப் பகுதியில் தொற்றுநோய் எச்சரிக்கை

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாந்திபேதி, தொடர்ச்சியான வயிற்றோட்டம் மற்றும் நெருப்புக்காய்ச்சல் ஆகிய தொற்று நோய்கள் பரவிவருவதாக மாநகர சபையின் சுகாதாரப்பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி விடுத்துள்ள செய்திக் குறிப்பில்-

தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்காக - நடைபாதையில் விற்கின்ற, மூடப்படாத நிலையில் உள்ள, பழுதடைந்த நிலையிலுள்ள தின்பண்டங்களையும், மூடப்படாமல் அழுகிய நிலையி லுள்ள பழங்களையும் வாங்கி உண்பதைப் பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரியுள்ளார்.

# மாவீரர் நாள் நினைவாக நூல் வெளியிடப்பட்டது

"மாவீரர் மாண்புகழ்" என்னும் நூலொன்றை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்டுள்ளது. மாவீரர் நாளையொட்டி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லத்தின் பின்னணித் தோற்றத்தில் தமிழீழ தேசியத் தலைவர் ஈகச்சுடர் ஏற்றுவதையும் மலர் அஞ்சலி செலுத்துவதையும் கொண்ட காட்சிகள் முகப்பு அட்டையிலும் முதல் மாவீரன் லெப்.சங்கரின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கும் காட்சியைப் பின் அட்டையிலும் தாங்கி இந்நூல் வெளியாகியுள்ளது.

# முன்னாள் வான் படைத்தளபதியை இரகசியப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவை இரகசியப் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

ஒலிவர் ரணசிங்க விமானப்படைத் தளபதியாக இருந்த காலத்தில் நடைபெற்ற ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, பாதுகாப்பமைச்சின் முன்னாள் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, முன்னாள் விமானப் படைத்தளபதி ஜெயலத் வீரக்கொடி ஆகியோரையும் விசாரிக்க இருப்பதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முப்படைகளுக்கும் ஆயுதக் கொள்வனவு செய்ததில் ஊழல்கள் நடந்ததா என விசாரணைகளை மேற்கொள்ள, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - சட்டத்தரணி மகிந்த வீரசிங்க தலைமையிலான குழுவை நியமித்துள்ளார்.

இக்குழுவின் அறிக்கைக்கு அமைவாகவே தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் 41 பாடசாலைகளுக்கு அன்பளிப்பு

## அதிபர்கள் நேரில் வந்து பெறுமாறு கோரிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் நூலக அபிவிருத்திப் பிரிவு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ், வடக்கு -கிழக்கில் உள்ள 1ஏபி, 1சி பாடசாலைகள் சிலவற்றுக்கு, சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தமிழ் நூல்களை வழங்கி வருகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள 41 பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த- ஹாட்லிக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, சிதம்பரக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை மகாவித்தியாலயம். ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இன்று காலை 9.00மணி தொடக்கம் நெல்லியடி மத்திய கல்லூரியில், இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் வலயத்தைச் சேர்ந்த - வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம், பெரியபுலம் மகாவித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆகிய பாடசாலைகளும்,

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த - இராமநாதன் மகளிர் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி, சங்கானை சைவப்பிரகாச ம.வி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும்,

தீவகம் வலயத்தைச் சேர்ந்த- சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வி, யாழ்ரன் கல்லூரி, நயினாதீவு ம.வி, நெடுந்தீவு ம.வி, தியாகராசா ம.ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய பாடசாலைகள் தமது நூற் பொதிகளை யாழ்ப்பாணம் வலயக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.மகேஷிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த -கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர்கல்லூரி, சந்திரபுரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் 9 ஆம் திகதி திங்கட்கிழமை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மாகாண நூலக இணைப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந.அனந்தராஜ் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

250க்கு மேற்பட்ட, பெறுமதி வாய்ந்த அரிய நூல்கள் வழங்கப்படுவதால், அவற்றை உரிய முறையில் பதிவு செய்து மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்துவதற்கேற்ற ஒழுங்குகளை அதிபர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நூல்களைப் பெற்றுக் கொள்ள வரும் போது பாடசாலை முத்திரைகளையும், பொருட்பதிவேட்டுப் புத்தகத்தையும் கொண்டு வந்து பெற்றுச் செல்லுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## படையினர், பொலிசாருக்கு எதிராக வழக்குகள்

(கொழும்பு)

இராணுவ, மற்றும் பொலிஸ் துறைகளைச் சேர்ந்த பலருக்கு எதிராக விரைவில் சட்டமா அதிபர் வழக்குகளைத் தாக்கல் செய்யவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக இவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்படும் எனவும் கூறப்படுகின்றது.



யாழ் - பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற சாயியின் 77 வது அவதார தின நிகழ்வுகளில் பிரசாந்தி கொடியை நுண்கலைக்கழக விரிவுரையாளரும், கலைஞருமான சிவப்பிரகாசம் ஏற்றுவதனையும் அருகில் நிலையத் தலைவர் கணேசலிங்கம் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

# காலத்துக்குக் காலம் தங்களைத் தாங்களே 'புதுப்பித்துக்கொள்ள' வேண்டிய தொழிற்படை

இன்று உலகம் பல்வேறுபட்ட போட்டிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. என்றுமில்லாத வகையில் மனித வளமானது, மனித மூலவளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்ற தசாப்தங்களில் சனத்தொகைப் பெருக்கமானது அந்நாட்டுக்குச் சுமையெனக் கருதப்பட்டு வந்தது. ஆனால், இன்று பெருந்தொகை மக்களுக்குக் கல்வியறிவூட்டித் தமது வேலைத் திட்டங்களை, தமது அபிவிருத்தியை - தாமே ஒருங்கிணைத்து செயற்படக் கூடியதான அறிவு கொடுக்கப்படுவது, 21 ஆம் நூற்றாண்டின் பிரதான அம்சமாகத் திகழ்கின்றது. இந்தவகையில் "அறிவுசார் மூலதனம்" என்றுமில்லாத வகையில் பிரபல்யம் பெற்றுள்ளது.

தொழிலாளியின் ''மனித வலு''- அவனது உடல் உழைப்புச் சக்தியினதும், உடல் உழைப்பினதும் ஆற்றல்களில் தங்கியிருந்தது. ஆனால் இன்று குறிப்பாக தகவல் தொழினுட்பப் பெருக்கத்தின் பின்னர் "அறிவு" அல்லது "தகவல்"களை யார் வைத்திருக்கின்றனரோ அவர்களே மூலதனத்தினை உருவாக்கியவர்கள் என வரையறுக்கப்படுகின்றனர். யார் அறிவினை வைத்திருக்கின்றனரோ அவர்களே வினைத்திறனுடன் தொழிலாற்றுபவர்கள் என எதிர்வு கூறப்படுகின்றனர்.

தகவலை அல்லது அறிவினை மூலதனமாகக் கொண்டு, தொழிலாற்றுவதும் அவ்வாறு தொழில் செய்யும் தொழிலாளர்களை உள்ளடக்கியதுமே அறிவுசார் மூலதனம் வரையறுக்கப்படும்.

ஒரு நாட்டின் தொழிற்படையை, அதனது அறிவுசார் மூலதனமாக மாற்றுவதே 21 ஆம் நூற்றாண்டின் அபிவிருத்தி மாதிரியாக அமையவுள்ளது. இந்தவகையில், ஒவ்வொரு தனிமனிதனும், தன்னை எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும் என்பதே இன்றைய சிந்தனையாகும்.

இந்தவகையில் தொழிற்படையிலுள்ள அதிக ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் அறிவுசார் தொழிலாளர்களாகத் தங்களைத் தாங்களே நிர்வகிக்க வேண்டும்.

அபிவிருத்திக்குப் பெருமளவு பங்களிப்பைத் தாங்களே செய்யக்கூடிய வகையில் தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும்.

அவ்வாறு தங்களை அபிவிருத்தி செய்வதற்கு, வளர்த்துக் கொள்வதற்கு அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். பொதுவாக சராசரி 50 வருடகால தொழில் செய்யும் வயதெல்லையில்- இளமையாகவும், மனோரீதியாகச் சுறுசுறுப்பாகவும் இருக்க அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

குறித்த ஒரு விடயத்தை - ஊழியர்கள் என்ன செய்கிறார்கள், அதை எவ்வாறு செய்கிறார்கள், அதை எப்பொழுது செய்கிறார்கள் என்பதையும், அவ்விடயத்தை எவ்வாறாக உச்சப்பயனுள்ள வகையில் மாற்றுவதென ஊழியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் ஆராய்வதே அறிவுசார் மூலதனத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்தவகையில், அறிவுசார் ஊழியர்கள் தங்களுக்கு வேலை வழங்கும் நிறுவனத்திற்கு நீண்டகாலம் பயனுள்ள வகையில் தொழிலாற்றக்கூடிய சக்தியினை, முடிந்தளவிற்குத் தமது நிறுவனத்திற்கு வழங்க வேண்டும்.

மனிதனது உடற்சக்தியை மட்டும் தனது முதலாகக் கொண்டு உழைப்பவர்கள் உடலுழைப்பாளர்கள். எதிர்காலத்தில் இன்று நவீன தொழிநுட்ப அறிவும அதனுடன் இணைந்த வகையி லான பாரிய கைத்தொழிலாக்கமும் உடலுழைப்பாளரை வலுவற்றவராக்கியுள்ளது. எனவே, உடலுழைப்பாளர், தொழிற்படையினுள் நுழைவதைப் பின் போடலாம்- ஆனால், அறிவினைத் தேடுவது மற்றும் புதுப்புது தொழிநுட்பங்களுக்கு ஏற்றவகையில் தன் னைத் தகவமைத்துக் கொள்வது மிகவும் அவசியமானது.

ஊழியர் ஒருவர் தமது 20 வயதுகளின் பிற்பகுதிவரை கலாநிதிப் பட்டத்தைப் பெறுவதற்காக பல்கலைக்கழகத்தில் இருப்பாரேயானால், அபிவிருத்தியடைந்த நாடுகளில் தற்பொழுது எதிர்பார்க்கப்படும் ஆயுட்கால எதிர்பார்ப்புகளுடன் அவர்கள் 80 வயதுவரை வாழும் சாத்தியமுண்டு. அதுமட்டுமல்லாமல், அவர்கள் தொடர்ந்து 60 வயதிற்கு மேல் வேலை செய்து கொள்ளக்கூடிய சாத்தியமும் உண்டு. பகுதி நேரவேலை செய்வார்களேயானால் ஏறக்குறைய 75வயதுவரை அல்லது அதற்கு மேலும் வேலை செய்யலாம். அறிவுசார் வேலையாட்களுக்குச் சராசரி வேலை செய்யும் வாழ்க்கை 50 வருடங்கள் வரை சாத்தியமானதாகும்.

ஆனால், இன்றைய உலகமயமாதல் உலகில்- ஒரு வெற்றிகரமான வர்த்தகத்தில் எதிர்பார்க்கப்படும் தொழிற்படைக்காலம் 30 வருடங்கள் மாத்திரமேயாகும். அதாவது தற்பொழுது அதிவேகமாக மாற்றங்கண்டு வரும் தொழிநுட்பத்திற்கு ஏற்றவகையில், ஒரு ஊழியர் முப்பது வருடங்களுக்கே வினைத்திறனுடன் செயலாற்றமுடியும் என எதிர்பாக்கப்படுகின்றது

அத்தோடு, நாங்கள் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பதுபோல் பெரும் கொந்



21 ஆம் நூற்றாண்டில் அறிவுசார் ஊழியராக தன்னை தகவமைத்துக் கொண்டவர்

தளிப்புள்ள காலகட்டத்தில், அவ்வளவு நீண்ட காலம் தொழிற்படையில் இருப்பது சாத்தியமற்றது. சாதாரணமாக நீண்டகாலம் நிலைத்து நிற்கும் நிறுவனங்கள் கூட, எதிர்காலத்தில் நின்று நிலைபெறும் என்று கூறிவிட முடியாத அளவுக்கு நிறுவனங்கள் தங்களது ஆயுட் காலாங்களை மிக விரைவில் முடிவிற்குக் கொண்டுவருகின்றன. அதாவது, காலப் போக்கிற்கு ஏற்ப வேறு நிறுவனங்களுடன் தம்மை இணைத்து அல்லது வேறு நிறுவனத்தை கையகப்படுத்தி, புதிய தொழிநுட்பத்திற்கு ஏற்றவகையில் தம்மை நிலைநிறுத்திக் கொள்கின்றன.

அதிகரித்த அளவில் தொழிலாளர்கள் விசேடமாக அறிவுசார் ஊழியர்கள், எந்த ஒரு வேலைகொள்பவரிலும் பார்க்க கூடுதலான காலம் நிலைத்திருப்பார் என்பது இன்று உறுதியாகிவிட்டது. அத்தோடு ஒன்றிலும் பார்க்க கூடுதலான தொழில், ஒன்றிலும் பார்க்க கூடுதலான பணி ஆகியவற்றிற்கு அவர்கள் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

பெரும் சாதனையாளர்களான- நெப்போலியன், லியனாடோ டாவின்ஸி, மொசாட் ஆகியோர் எப்பொழுதும் தங்களை நிர்வகித்துக் கொள்வதில். பெரும் அக்கறையாக இருந்தனர். இவ்வுலகிற்கு அவர்கள் மிக அருமையான புறநடைகள் . அவர்களுடைய திறமை மற்றும் சாதனைகளில் வழமையின் எல்லைகளுக்கு அப்பால் அவர்கள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

இப்பொழுது அளவான சொத்துடையவர்கள கூட, அதாவது சராசரி மனிதர்களும் தங்களை நிர்வகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டிய நூற்றாண்டாக இவ் இருபத்தியோராம் நூற்றாண்டு அமையப் போகின்றது என்பது திண்ணம்.

அறிவுசார் ஊழியர்கள் மிகவும் இறுக்கமான வினாக்களைத் தம்மளவில் எதிர் கொள்ள வேண்டும். அவையாவன:

1. நான் யார்? என்னுடைய வலிமைகள் என்ன? நான் எவ்வாறு வேலை செய்கிறேன்?

2. நான் எங்கு உரித்துடையவனாயிருக்கிறேன்?

3. எனது பங்களிப்பு என்ன?

4. நிறுவனத்துடனான உறவுரிமை மற்றும் பொறுப்பை எவ்வாறு எடுத்துக் கொள்ள வேண்டும்?

5. எம்முடைய வாழ்க்கையின் இரண்டாவது பாதிக்கு எவ்வாறு நிச்சயமாக திட்டமிட வேண்டும்? அவ்வாறு திட்டமிடுவதன் மூலம் ஏற்படும் பலன்கள் என்ன?

என்பவையே அக்கேள்விகளாகும்.

பெரும்பாலான ஊழியர்கள் தாங்கள் என்ன வகையில் திறமையானவர்கள் என்பது தங்களுக்குத் தெரியுமென நினைக்கிறார்கள். அவ்வாறு நினைப்பின் அது தவறானதாகும். தாங்கள் எவற்றில் திறமையானவர்கள் அல்ல என்பது பொதுவாக ஊழியர்களுக்குத் தெரிய வேணடும். மேலும், சரியாக இருப்பதை விடவும் அதிகமாகத் தவறாகத்தான் மக்கள் இருக்கிறார்கள். ஒருவர் தன்னுடைய பலத்தினால் மாத்திரந்தான் எதையும் நிறைவேற்ற முடியும். பலவீனத்தில் எந்த நிகழ்ச்சியையும் உருவாக்க முடியாது. ஏதாவதொன்றை தனியனாகவும் ஒருவரால் மட்டும் செயது விடமுடியாது.




மிகப் பெரும்பான்மையான ஊழியர்களுக்கு ஒரு சில தசாப்தங்களுக்கு முன்பு மாத்திரந்தான் தங்களுடைய பலத்தை அறிவது பொருத்தமற்றதாயிருந்தது. ஒரு உத்தியோகத்தினுள், ஒரு தொழில் பிரவேசத்தினுள் ஒருவர் பிறந்துள்ளார். ஒரு உழவனின் பிள்ளை உழவனாயிருக்கிறான். ஒரு உழவனாக இருப்பதில் அவன் திறமையானவனாக இல்லாவிட்டால் அவன் தோல்வியடைந்து விடுவான். கைத்தொழிலாளி (மேசன், தச்சன்)



21 ஆம் நூற்றாண்டில் அறிவுசார் ஊழியராக தன்னை தகவமைத்துக் கொள்ளாதவர்.

மற்றும் ஏனைய பல துறைகளிலும் இவ்வாறே இருந்தது. ஆனால், இப்பொழுது மக்களுக்குத தெரிவுகள் உள்ளன. ஆகையால், அவர்கள் தங்களுடைய வலுவை அறிந்து எந்த வேலைக்குத் தாம் பொருத்தமானவர்கள் என்பதை அறிய முடியும். அதைக் கண்டு பிடிப்பதற்கு ஒரே வழிதான் உண்டு. அதுதான் "பின்னூட்டல் பகுப்பாய்வு"(**Feed back analysis**) ஆகும். ஒரு முக்கிய தீர்மானத்தை அல்லது முக்கிய பகுப்பாய்வை ஒருவர் எடுக்கும் பொழுதெல்லாம் சில மாதங்கள் அல்லது ஒரு வருடத்தின் பின்பு எதிர்பார்ப்புகளுக்குரிய பெறுபேறுகளிலிருந்து பின்னூட்டலை அவர் மேற்கொள்ள வேண்டும்.

நியாயமான அளவு குறுகிய காலத்தினுள், அநேகமாக இரண்டு அல்லது மூன்று வருடங்களுள் இந்த எளிமையான செயல்முறை- முதலில் அவர்களுடைய பலங்கள் எங்குள்ளன என்பதை ஊழியர்களுக்கு எடுத்துச் சொல்லும். அத்தோடு ஒருவரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் இதுதான் அநேகமாக மிகமுக்கியமான விடயமாகும். அவர்களுடைய பலத்திலிருந்து கிடைக்கும் முழுமையான விளைவை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு, அவர்கள் என்ன செய்தார்கள் அல்லது எதைச் செய்யத் தவறினார்கள் என்பதை, அவர்களுக்குப் பின்னூட்டல் பகுப்பாய்வு காட்டிவிடும். குறிப்பாக, அவர்கள் எங்கே திறமையற்றவர் எனபதை அது அவர்களுக்குக் காட்டும். எங்கே அவர்களுக்கு வலிமை இல்லையென்பதையும், அதனால் தொழிலில் குறித்த விடயத்தை நிறைவேற்ற முடியாது போனதையும் இறுதியாக அது அவர்களுக்குக் காட்டிவிடும்.

பின்னூட்டல் பகுப்பாய்விலிருந்து பல செயல்முடிவுகள் மற்றும் பலங்களை- அவர்களுடைய பலங்களின் செயற்பாடுகளையும் பெறுபேறுகளையும் தெளிவாக உணர்ந்து கொள்ளவும், வினைத்திறன் மிக்க வேலைத் திட்டங்களை உருவாக்கவும் முடியும். அந்த வகையில் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவகையில் தங்களை நிர்வகித்துக் கொள்ள பின்னூட்டல் பகுப்பாய்வு பெரிதும் துணைநிற்கும்.

இந்த வகையில், இன்றைய உலகமயமாதல் போக்கில் நின்று நிலைக்கும் நிறுவனங்களிலும் பார்க்க, அதன் ஆயுட்காலங்களிலும் பார்க்க- மனிதனது (ஊழியர்களினது) மனித மூலதனமானது மிகவும் முக்கியமானதாக் கருதப்படுகின்றது.

மனித மூலதனத்தின் அதிகரிப்பே இன்றையே உலகின் அறிவுசார் மூலதனமாகும். 21ஆம் நூற்றாண்டில் ஒரு நிறுவனத்தின் பலம்- அது எத்தகைய அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட தொழிற்படையை வைத்திருக்கின்றது. என்பதிலேயே தங்கியிருக்கின்றது.

**எழில்**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | சுன்னாகம் | சங்கானை | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்றுறை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் | 55/- | 50/- | 50/- | 50/- | 60/- | 40/- | 60/- | 60/- |
| பச்சை மிளகாய் | 90/- | 80/- | 100/- | 80/- | 80/- | 70/- | 90/- | 100/- |
| கத்தரிக்காய் | 80/- | 80/- | 60/- | 70/- | 80/- | 50/- | 80/- | 80/- |
| பாகற்காய் | ✱ | 100/- | 90/- | 100/- | ✱ | 40/- | ✱ | 80/- |
| வெண்டிக்காய் | 30/- | 40/- | 20/- | 25/- | 30/- | 25/- | 40/- | 30/- |
| உருளைக்கிழங்கு | 80/- | 80/- | 80/- | 80/- | 80/- | 80/- | 80/- | 80/- |
| பீற்றூட் | 40/- | 30/- | 25/- | 25/- | 40/- | 25/- | 20/- | 30/- |
| கரட் | 60/- | 70/- | 40/- | 60/- | 60/- | 40/- | 50/- | 80/- |
| பயிற்றை | 60/- | 50/- | 55/- | 80/- | 60/- | ✱ | 80/- | 60/- |

# தென்னைவள வருமானத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் "மைற்" சிலந்திச் சிற்றுண்ணி பூச்சி



1998 ஆம் ஆண்டில் இருந்து தேங்காய் உற்பத்திக்கு சவாலாக விளங்கும் 'மைற்' பூச்சியானது தென்னைச் செய்கையாளர்களுக்குப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றது. மெக்சிக்கோ, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளல் காணப்பட்ட இப் பூச்சியானது கடந்த நான்கு வருடங்களாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலும் பெரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றது.

### மைற் பூச்சி

1. இது வெற்றுக்கண்களால் இலகுவாக பார்க்க முடியாத, ஆனால் சரீரத்தில் ஊரும்போது உணரக்கூடியதான ஒரு பூச்சியாகும்.

2. நுணுக்குக்காட்டியினூடாக எடுக்கப்பட்ட தரவின்படி இது 150 - 200 மைக்ரன் மீற்றர் நீளம், 30 - 40 மைக்ரன் மீற்றர் அகலம் உடையது.

3. காற்றின் மூலமும், தேன்பூச்சிகள், காலத்துக்குக் காலம் இடம் பெயரும் பறவைகள் மூலமும் பாதிக்கப்பட்ட தேங்காய்கள், குரும்பைகளை எடுத்துச் செல்வதன் மூலமும் பரவக்கூடியது.

4. ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு ஒரு தடவை இனம்பெருக்கும் தன்மையுடையது.

5. மப்பு மந்தாரமான நிலை இதன் பெருக்கத்துக்கும், தாக்கத்துக்கும் சாதகமானதாகும்.

6. ஒரு மாதம் தொடக்கம் 4 மாத வயதுடைய குரும்பைகள் இதன் தாக்குதலுக்கு இலக்காகின்றன.

### பூச்சித் தாக்கத்தினால் ஏற்படும் தீமைகள்

1. குரும்பை முகிழுடன் தொடர்புடைய பாகத்தில், தாக்கம் ஏற்படும்போது மட்டும், குரும்பைகள் உதிர்ந்து விழும் அல்லது காய்ந்து கருகிக் காணப்படும்.

2. குரும்பையின் (**Butter nut**) முகிழ் பாகத்தினுள் காணப்படும் மிருதுவான பகுதியே தாக்கத்துக்கு உள்ளாவதால், குரும்பையானது வளர்ச்சியடையும்போது, அந்தப்பாகங்களில் சூரியஒளி படும்போது, ஊதா நிறம் கரு ஊதா நிறமாக மாறும். மேற்கொண்டு தேங்காய் வளர்ச்சியடையும்போது சொர சொரப்பாகக் காணப்படும். சிலவேளை பிசின் வடிந்து காணப்படும்.

3. சிறு கைத்தொழில் துறையில் கயிறு, தும்புத் தொழிலுக்கு தரமான தும்பைப் பெற முடியாத நிலை தோன்றும்.


4. பொச்சுப்பாகம் இறுக்கமாக காணப்படுவதால் தேங்காய் சிறிதாகக் காணப்படுவதோடு ஒழுங்கற்றும் காணப்படும்.

5. கொப்பறாவுக்குரிய தேங்காய், சதைப்பிடிப்புக் குறைந்து காணப்படும்.

6. தேங்காய் உரித்தல் தொழிலில் ஈடுபடுபவர்கள்- உரிப்பதற்கு சிரமம் அடைவதோடு, குறிப்பிட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட அளவு உரிக்க முடியாமல் திண்டாடுவார்கள்.

7. தேங்காய் சந்தையில் உரிய விலைக்கு விற்கமுடியாதிருக்கும்.

8. திருமணவிழாவில் சரி பாதியாக முடிப் பக்கம்



பெரிதாக வருமாறு உடைக்க முடியாது. சிரட்டை சிதறி உடையக்கூடும். இது திருமண விழாவில் உளவியற் தாக்கத்தை உண்டுபண்ணும்.

### பூச்சிக் கட்டுப்பாட்டு முறை

1. ஒரு பூச்சியின் அல்லது ஒரு நோயின் தாக்கம் எல்லாப் பயிரையும் தாக்குவதில்லை. பலம் பொருந்தியது தாக்கத்தில் இருந்து தப்பக்கூடும். எனவே, முறையான பசளைப் பிரயோகம், பண்பாட்டு செயல் முறைகள் அவசியம்.

2. தாக்கப்பட்ட குரும்பைகள் மட்டும் இருந்தால் பாளை, குரும்பை வட்டுப் பாகம் என்பன நனையத்தக்கதாக, 1-3 லீற்றர் சல்பர் கலந்த பூச்சி நாசினிகளை விசிறலாம்.

3. வேப்பிலை, உள்ளி, நீர் சேர்ந்த கலவை விசிறலாம்.

4. வேப்பெண்ணை 50 கிராம், சோப் 5 கிராம், உள்ளி 5-10 பற்கள் (உள்ளி நன்றாக அரைத்தது) கலவையை நீருடன் கலந்து தெளிக்கலாம்.

5. மூன்று மாதத்துக்கு ஒருதடவை இந்தச் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

6. தேசிய மட்டத்தில் முறையான செயற்திட்டம் வகுத்து, மக்களின் பங்களிப்புடன் தடுப்பு முறை கையாளப்பட்டால் மட்டும் சாத்தியமானதாக்கலாம்.

7. மருந்து தெளிகதும்போது- 12 மாதத்தின் பின்பே அதாவது 3 மாத வழுக்கல் பிடிக்காத குரும்பைகளுக்கு மருந்து விசிறும்போதும், அதிலிருந்து 9 மாதத்தின் பின்பே தேங்காய் அறுவடை செய்வதாலும், எமது பிரதேசம் வரண்ட பிரதேசமாக இருப்பதாலும் இரசாயன மருந்துகள் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புக்கள் இல்லை.

**கந்தையா தனிநாயகம்**
**கிளிநொச்சி மாவட்ட**
**தென்னை அபிவிருத்தி**
**உத்தியோகத்தர்**

# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

**யாழ்.**குடாநாடு பதினைந்து கடற்தொழில் பரிசோதகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதையும் அதில் நெடுந்தீவுக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிய விபரத்தையும் சென்ற அத்தியாயத்தில் பார்த்திருந்தோம். இன்றைய தொடரில் ஊர்காவற்துறைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவில் கடற்றொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்க்கலாம்.

ஊர்காவற்துறையானது தனி ஒரு கடற்தொழில் பரிசோதகர் பிரிவாக விளங்குகின்றது. ஊர்காவற்துறைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் நயினாதீவு, கரம்பன், அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்துறை, தம்பாட்டி, சின்னமடு ஆகிய பகுதிகள் அடங்குகின்றன.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், நயினாதீவானது வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்குள் அடங்கியிருந்தாலும், ஊர்காவற்துறை கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள்ளேயே இது அடங்குகின்றது. அதே போல் ஊர்காவற்துறைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் காரைநகர்ப் பகுதி அடக்கப்படவில்லை. காரைநகர்ப் பகுதி , சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள்ளேயே இடம்பெற்றுள்ளது

| பிரிவு | குடும்ப எண்ணிக்கை | குடித் தொகை | கடற்தொழில் ஈடுபடுவோர் |
|---|---|---|---|
| நயினாதீவு | 224 | 1078 | 265 |
| அனலைதீவு | 90 | 439 | 91 |
| எழுவைதீவு | 94 | 102 | 471 |
| ஊர்காவற்துறை | 42 | 215 | 43 |
| கரம்பன் | 84 | 417 | 83 |
| சின்னமடு | 48 | 174 | 47 |
| தம்பாட்டி | 195 | 795 | 197 |

பொதுவாக ஊர்காவற்துறைக் கடற் தொழில் பரிசோதகர் பிரிவுக்குட்பட்டவர்களில் கணிசமானோர் கடற்தொழில் குடும்பங்களாகவே உள்ளனர். கடந்த கால இடப்பெயர் வுகளின் போது ஊர்காவற் துறைப் பிரதேச மக்கள் இடம்பெயர முடியவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

இங்கேயுள்ள அட்டவணை மூலம் இப் பகுதியில் கடற் தொழில் செய்கின்ற குடும்பங்கள், குடித்தொகை, கடற்தொழிலளர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களைப் பார்ப்போம்.

பொதுவாக ஊர்காவற்துறைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள்ளே பாரம

## அன்றும்

பரிய மீன்பிடிக்கலங்களே பயன்படுத் தப்பட்டு வருகின்றன. எனினும் நயினா தீவு, அனலைதீவு, எழுவை தீவு போன்ற பிரதேசங்களில் இயந்திரமயமாக்கப்பட்ட பிளாஸ்ரிக் படகுகள் பயன்படுகின்றன.

மீனுற்பத்தியைப் பொறுத்தளவில்- இப் பிரதேசத்தில் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலேயே பெருமளவு மீன்கள் பிடிக்கப்படுகின்றன. குறிப்பாக இப் பிரதேசத்தில் விளை,திருக்கை, பெருநண்டு, இறால், சுறா என்பன கூடுதலாகப் பிடிக்கப்படுகின்றன.

உதாரணமாக கடந்த ஐப்பசி மாதத்திலே பிடிக்கப்பட்ட மீனின் அளவை இங்கு தருகிறோம்.

| | | |
|---|---|---|
| நயினாதீவு | - | 4220 கிலோ |
| அனலைதீவு | - | 3000 கிலோ |
| எழுவைதீவு | - | 4525 கிலோ |
| மெலிஞ்சிமுனை | - | 3825 கிலோ |
| தம்பாட்டி | - | 3600 கிலோ |
| சின்னமடு | - | 500 கிலோ |
| ஊர்காவற்துறை | - | 400 கிலோ |

ஒவ்வொரு பிரிவிலும் பெருமளவு பிடிக்கப்படும் மீன்களாவன.

நயினாதீவு - விளை,பாரை, கட்டாப்பாரை, சுறா, நண்டு.
அனலைதீவு - விளை, சிறுபாரை.
எழுவைதீவு - திருக்கை, கட்டா, பெரு நண்டு.
தம்பாட்டி - பிரதானமாக இறால்
கரம்பன் - (மெலிஞ்சிமுனை) விளை, கணவாய், சிறுமீன்

தம்பாட்டிப் பகுதியில் பெருமளவு இறால் பிடிக்கப்படுகின்றது. அது அப்பகுதி மீனவர்களுக்கு கணிசமான வருவாயைத் தேடித்தருகின்றது. மேலும் நயினாதீவு, மெலிஞ்சி முனைப் பகுதிகளில் கடலட்டையும் பிடிக்கப்படுகின்றது. 1 கிலோ கடலட்டை ரூ.1500 வீதம் கொள்வனவு செய்யப்படுகிறது.

## இன்றும்

ஊர்காவற்துறை கடற்றொழில் பரிசோதகர் பிரிவில் 09 கடற்றொழிலாளர் சங்கங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கடற்றொழிலாளர்கள் அங்கத்துவம் பெற்றுத் தமது சேமிப்புக களை சங்கங்கள் ஊடாகச் செய்து வருகின் றனர். மேலும் அரசும், அரச சார்பற்ற நிறுவனஙகளும் தமது உதவிகளை கடற்றொழிலார்களுக்கு இச்சங்கங்களினூடாகவே வழங்கின் றன.

தம்பாட்டியில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமானது, கடற்றொழிலாளர் களிடம் இருந்து இறாலைக் கொள்வனவு செய்து விற்பனை செய்கிறது. இதன்மூலம் கிடைக்கும் லாபம் சங்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் படுகிறது.

தமிழின்பன்


## தொழில்வங்கி



**நிறுவனம்:-** வரையறுத்த சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்தி சேவைகள் லிமிட்டெட்

**வெற்றிடமாக உள்ள பதவிகள்:-**
வடக்குக் கிழக்கிற்கான சிரேஷ்ட முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படை)
உள்ளகக் கணக்காய்வு உதவியாளர்
நிறைவேற்றுக் கணக்காளர்

**அடிப்படைத் தகுதி / அனுபவம்:-** பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்

**விண்ணப்ப முடிவுத் திகதி:-** 10.12.2002

**தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்- " நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**

# கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவு சிறப்பு மலர்

இந்த உலகில் மற்றவர்களுக்காக வாழ்ந்தும், வாழ்ந்து காட்டியும் மறைந்தும் மறையாது மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் பெரியோர்கள் வரிசையில் கூட்டுறவுப்பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களும் ஒருவராவார்.

இவர் மானிப்பாயிலுள்ள நவாலி என்னும் கிராமத்தில் விஸ்வலிங்கம்- அன்னம்மா தம்பதிகளுக்கு புதல்வராக 1892ம் ஆண்டு பிறந்தார். தனது இளம் வயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் , இலண்டன் மெற்றிக்குளேசன் பரீட்சையில் சித்தியடைந்து, தனது பத்தொன்பதாவது வயதிலேயே தான் கல்வி கற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றத் தொடங்கினார். சுமார் முப்பது வருடங்கள் அதிபராக இருந்து கல்வி உல கிற்கு அளப்பரிய சேவையாற்றினார்.

இவர் சிறந்த கல்விப்பணிகளையும், சமூகப்பணிகளையும் ஆற்றியபோதும் அவற்றுள் இவர் ஆற்றிய கூட்டுறவுப்பணி மிக முக்கியமானதாகும். கூட்டுறவையும், கூட்டுறவுக் கொள்கைகளையும், அதன் விழுமியங்களையும் ஒரு சமயமாக, வாழ்வியல் தத்துவமாக இதய பூர்வமாக நேசித்த பெரியார், கூட்டுறவு என்றால் என்ன என்பதற்கான சொல்லில் எழுதப்பட்ட வரைவிலக்கணத்தை செயலில் செய்து காட்டியவர்.

எதனையும் சொல்வதை விட செய்வது கடினம்,சிந்தனைகளைப் போதிப்பதை விட சாதிப்பது கடினம், வழிமுறைகளை காட்டுவதிலும் அதனைக் கடைப்பிடிப்பது கடினம், தத்துவங்களை வாசிப்பதை விட நேசிப்பது கடினம், தனக்காக வாழ்வதை விட பிறருக்காக வாழ்வது கடினம். ஒரு நெறி முறையில் தான் செல்வதைவிட மற்றவர்களை நெறிப்படுத்துவது கடினம். இத்தனை கடினமான விடயங்களையும் செய்து காட்டியவர் பெரியார் வீரசிங்கம் அவர்கள்.

பெரியார் வீரசிங்கம் அவர்களை கூட்டுறவாளர்கள் என்றும் தம்மனதில் கொள்வதற்கு பல காரணங்கள் உண்டு. அவரது கூட்டுறவுப்பணி தனியிடம் பெற்றமைக்கு முக்கிய காரணம், கூட்டுறவுக்கல்வி மீது அவருக்கு இருந்த அதீத நம்பிக்கையே. இதன் காரணமாகவே சிறந்த கூட்டுறவுப்பணியாளர்களை உருவாக்கும் பொருட்டு யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுக் கல்லூரியை அமைத்தார். “கூட்டுறவுத் தத்துவங்களும், செயற்பாடும்” என்ற நூலை எழுதி வெளியிட்டார். “கூட்டுறவாளர்” என்ற ஆங்கிலப் பத்திரிகையையும், “ஐக்கிய தீபம்” என்ற தமிழ் பத்திரிகையையும் வெளியிட்டார்.

இவர் தனது கூட்டுறவுப்பணியில் பல ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களையும், இரண்டாம்படிக் கூட்டுறவு அமைப்புக்களையும், கூட்டுறவு இயக்கத்தை ஒன்றிணைக்கக் கூடிய மாவட்ட, தேசிய மட்ட அமைப்புக்களையும் உருவாக்கினார்.



குறிப்பாக வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை, இலங்கை தேசிய கூட்டுறவுச்சபை, யாழ்ப்பாண கூட்டுறவுக்கல்லூரி, கூட்டுறவு வங்கி போன்ற அமைப்புக்களை குறிப்பிடலாம். மனித மனங்களை வெல்லும் பண்பும், மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் ஆற்றலும் அவரிடம் நிறையவே இருந்தமையால், அவரால் வட-கிழக்கு தமிழ்பேசும் கூட்டுறவாளர்களை மட்டுமன்றி, இலங்கை பூராவும் உள்ள கூட்டுறவாளர்களை ஒன்றிணைக்க முடிந்தது. சாதி, மத,அரசியல், சமூக, ஆண், பெண் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட கூட்டுறவு இயக்கமானது ஆட்களின் ஒன்றிணைப்பால் வலுவூட்டப்பட்டு வளர்க்கப்பட வேண்டியது. கூட்டுறவின் கோட்பாடுகளும், கொள்கைகளும் நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் ஏட்டுச் சித்தாந்தங்கள் என்று பேசுபவர்களுக்கு அது செயற்படும் தன்மையது என்பதை செயலில் நிரூபித்தவர்.

இன்று பேசப்படுகின்ற இன ஒற்றுமை, சமாதான சகவாழ்வு, வட-கிழக்கு இணைப்பு என்ற பல விடயங்கள் அன்று கூட்டுறவு மூலம் நிலை நிறுத்தியவர். வட-கிழக்கு கூட்டுறவாளர்களுக்கிடையே மிகப்பலமான ஒன்றிணைப்பு இருந்தது. உண்மையான,நேர்மையான, அர்ப்பணிப்புள்ள கூட்டுறவாளர்களை உருவாக்கி ஒன்றிணைத்து அதன் மூலம் இப்பிரதேச சமூக பொருளாதார கலாசார மேம்பாடு என்னும் இலக்கை நோக்கி பயணித்தவர்.

இன்றைய உலகின் பொருளாதார ஒழுங்கில் கூட்டுறவை நிலை நிறுத்துவதில் கூட்டுறவாளர்கள் எத்தகைய பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற இக்கால வினாவுக்கு கூட, அக்கால அவரது கூட்டுறவுப் பணியில் விடைகாண முடியும். இலங்கை கூட்டுறவு வரலாற்றில் வடபகுதிக்கு ஒரு காலகட்டத்தில் தனிச்சிறப்பு இருந்தது என்றால் அதற்குக் காரணம் பெரியார் வீரசிங்கம் அவர்களே.

தலைமைத்துவ பண்புகள் என அடையாளம் செய்யப்பட்ட அத்தனை ஆற்றல்களின் வெளிப்பாடே பெரியார் வீரசிங்கம் அவர்களின் தோற்றம் எனலாம்.பெரியார் வீரசிங்கம் அவர்களின் காலத்தில் அவரோடு இணைந்து செயலாற்றிய கூட்டுறவாளர்கள், தமது இறுதி மூச்சுவரை கூட்டுறவில் காட்டிய அக்கறையும், ஆற்றிய பணிகளும்- பெரியார் வீரசிங்கம் அவர்களின் மறைவுக்குப் பின்னும் அவரது பிரதி விம்பங்களாகவே பிரதிபலித்தன. காரணம், அவர் காலத்தில் கூட்டுறவில் ஈடுபட்டவர்களுக்கு கூட்டுறவு மீதான பற்றுதியை அவரால் வளர்க்க முடிந்தமையே.

கூட்டுறவை உண்மையாக நேசிக்கும் ஒவ்வொரு கூட்டுறவாளர் உள்ளத்துக்குள்ளும் அமரர் வீரசிங்கம் அவர்கள் மீதான பற்று இயல்பாகவே வேரூன்றி விடும். கூட்டுறவை சட்டத்தாலோ, அதிகாரத்தாலோ நடைமுறைப்படுத்த முடியாது. மனிதனின் ஒன்றிணைப்பாலும், நேர்மையாலும், விடாமுயற்சியாலும் மட்டுமே வளர்க்க முடியும் என்பதில் என்றுமே நம்பிக்கை உடையவர். கூட்டுறவை கூட்டுறவாளர்களே வழி நடத்த வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்த இவர் எந்த இடத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் கூட்டுறவுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவும், அதன் எதிரிகளுக்கு எதிராக கர்ச்சிக்கவும் தயங்காத வீரசிங்கமாகவே வாழ்ந்தவர். அவரது தலைமைத்துவத்தின் கீழ் தனக்கென ஒரு இடம் பெற்ற கூட்டுறவு இயக்கமானது அவரது இழப்பால் ஏற்பட்ட தலைமைத்துவ வெற்றிடத்தை இன்றுவரை நிரப்பவே இல்லை என்றால் அது மிகையாகாது.

எக்காலத்திற்கும் பொருத்தமான, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான நல்லதொரு கூட்டுறவுத் தலைமைத்துவத்திற்கு முன்னுதாரணமாக வாழ்ந்த கூட்டுறவுப் பெரியார், கூட்டுறவாளர்களால் என்றும் நேசிக்கப்படுவது மட்டுமன்றி பூசிக்கப்பட வேண்டியவர். அவர் தம் கூட்டுறவுப்பணிக்கு நிகரான கைமாற்று ஒன்றை கூட்டுறவுச்சமூகம் செய்யமுடியாதுள்ள போதும், அவர் விட்டுச்சென்ற கூட்டுறவுப் பணியை பின்பற்றி கூட்டுறவை புதுப்பொலிவுடன் நெறிப்படுத்தி இன்றைய உலகின் ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப புதியதோர் கூட்டுறவுச் சமூகத்தை படைப்போமாக.

**வாழ்க கூட்டுறவு**
**வளர்க நம் பெரியார் புகழ்.**

-கூட்டுறவாளர்.


**வலி .கிழக்கு வட பகுதி**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**அச்சுவேலி**

**எமது சங்கம் வாடிக்கையாளர்கட்கும், அங்கத்தவருக்கும் ஆற்றிவரும் சேவைகள்**

- ✧ நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனை
- ✧ ஒப்பந்த சேவைகள்
- ✧ உலர் உணவுப் பொருட்கள் விநியோகம்
- ✧ கல்விச் சேவைகள்
- ✧ புடைவை வகைகள்
- ✧ வங்கிச் சேவைகள்
- ✧ உரம், கிருமிநாசினி விநியோகம்
- ✧ வாடகைக் கதிரைகள் சேவைகள்
- ✧ கோழித்தீன் வகை விநியோகம்
- ✧ மகளிர் மனைப்பொருளியல் சேவைகள்
- ✧ எரிபொருள் விநியோகம்
- ✧ மருந்தக சேவைகள்
- ✧ கட்டடப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் விநியோகம
- ✧ தொலைத் தொடர்பு சேவைகள்

T.P.NO-உ.நாடு 070-21-2382
T.P.NO-வெ.நாடு 0094-70-21-2382

**மேற்படி தரமான பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலையில் எமது நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்**

(சி-270)

**வலி.கிழக்கு (வ.ப) ப.நோ.கூ.சங்கம்**
**அச்சுவேலி**



**கூட்டுறவின் சேவையைப் பெற வாரீர்**

**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**உங்கள் எதிர்காலத்திற்காய் சேமிக்க**
**கூட்டுறவு கிராமிய வங்கிச் சேவை**

- ✪ குறைந்த செலவில் உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி சேவை
- ✪ குறைந்த கட்டணத்தில் தரமான போட்டோ பிரதி சேவை
- ✪ குறைந்த கட்டணத்தில் நவீன ஆடைத் தையலகம்
- ✪ மகளிர் நல்வாழ்விற்காய் மகளிர் மனையியற் பயிற்சி
- ✪ சிறப்பான முறையில் கணினி அச்சுப் பதிப்பு
- ✪ லான்மாஸ்ரர் வாகன சேவை

மற்றும் பல விபரங்கட்கு



(சி-272)

**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**
**தொலைபேசி :- உள்நாடு 070 212632 வெளிநாடு 0094 70 212632**

# கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவு சிறப்பு மலர்

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி

01. சகல விதமான நுகர்வுத் தேவைகளுக்கும் - மொத்த, சில்லறை விற்பனை நிலையங்கள்- அச்செழு, கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய், ஊரெழு

02. சிறுவர், ஆடவர், பெண்களின் துணிவகைள், பாடசாலை உபகரணங்கள், அலங்காரப் பொருட்களுக்கு - மாதிரி விற்பனை நிலையம்- நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய

03. வாகன சேவைக்கு - நீர்வேலி மொத்த நிலையம்

04. கனரகப் பொருட்கள், கட்டடப் பொருட்கள், விவசாய உபகரணங்கள், ஏசியன் பெயின்ற் வகைகளுக்கு - இரும்பு விற்பனை நிலையம், நீர்வேலி

05. வீட்டு வைபவங்களுக்கு வேண்டிய கதிரைகளுக்கு - மொத்த நிலையம்- நீர்வேலி, உரும்பிராய்

06. நிழற்படப்பிரதியிடும் சேவைக்கு - வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கத் தலைமையகம், நீர்வேலி

07. தொலைத்தொடர்பு சேவைக்கு - வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கத்தலைமையகம், நீர்வேலி (உள்ளூர், வெளியூர் சேவை)

08. பொதி செய்த அயடீன் கலந்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற- இருபாலை/செம்மணி உப்பளம்.

09. எரிபொருள் தேவைக்கு - கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம

10. வங்கிச் சேவைக்கு - கிராமிய வங்கிகள்- நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய்

11. கட்டட ஒப்பந்த வேலைகளுக்கு - வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி (சி-269)

மக்கள் சேவையே வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கச்சேவை.

---

கூட்டுறவுப் பெரியார்
வீரசிங்கத்தின் சேவையினை
அன்புடன் நினைவு கூருகின்றோம்.

## கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

(சி-268)

---

கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் கனவு இங்கு நனவாகிறது.

## சங்கானை தென்னை பனை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்

**எமது சங்கத்தின் சேவைகள்**

1) கள், பதனீர் வெல்ல உற்பத்திகள்
2) போத்தலில் கள் அடைத்தல்
3) மகளிர் குழுவேலைத் திட்டம்
4) பாலர் பாடசாலை நடாத்துதல் (8 பாடசாலைகள்)

(சி-273)

---

## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் கனவே எம் பணி.

எமது சங்கம் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு ஆற்றிவரும் சேவைகள்


- அங்கத்தவர்களுக்கான நலன்கள்
  - -பனை பதார்த்தங்களைப் பெற்று நியாயமான விலையில் விற்றல்
  - -கட்டாய சேமம், சாதாரண சேமம் போன்ற சேமிப்புப் பழக்க வழக்கத்தை ஊக்குவித்தல்.
  - -விபத்து நிதி/தொழிற்பயிற்சி/விவசாய காப்புறுதி திட்டம், ஓய்வூதியம் வழங்கல்
- பணியாளர் நலன்
  - -ஊழியர் நம்பிக்கை நிதி/பணிக்கொடை வசதிகள்
- கல்விச்சேவைநலன்
  - -முன்பள்ளி பாடசாலை நடாத்தல் (09)
  - -மாணவர்களுக்கு சத்துணவுத்திட்டம்
- மகளிர் குழுவினருக்கான நலன்
  - -பன்ன வேலை கற்கை நெறிகள்/தையல் பயிற்சி நெறி
- கிராமிய வங்கிச் சேவை
  - -உழைக்கும் போதே சேமிப்புத் திட்டம்

(சி-271)

**மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்**

---

## கூட்டுறவே நாட்டுயர்வு




நுகர்வோர்க்குத் திருப்தியான
சேவையுடன்
சமூக மேம்பாடு நோக்கி
கல்வி அபிவிருத்தி,
அங்கத்தவர் நலன் பேணல்,
இலக்கியப் படைப்பாளிகள்
ஊக்குவிப்பு,
வாடகை சேவைகள்,
எவரையும் வியக்க வைக்கும்
இன்னும் பல சேவைகள்.
கூட்டுறவின் வளர்ச்சிக்கு எமது
மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

(சி-265)

**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்**

---

## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவோடு...



நுகர்வோர்க்குத் திருப்தியான
சேவையுடன்
கல்வி அபிவிருத்தி
சமூக மேம்பாடு நோக்கி
இலக்கியப் படைப்பாளிகள்
ஊக்குவிப்பு
அங்கத்தவர் நலன் பேணல்
வாடகை சேவைகள்
எவரையும் வியக்க வைக்கும்
இன்னும் பல சேவைகள்
கூட்டுறவின் வளர்ச்சிக்கு எமது
மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்

01 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(சி-266)

---

கூட்டுறவு தந்தையின் சேவைகளை
இந்நாளில் நன்றியுடன் நினைவு
கூருகின்றோம்.

**உங்கள் சேவைகள் எதுவானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளத் தயக்கம் வேண்டாம்**

வழமையான நுகர்ச்சிப் பொருட்கள் வழங்கலுடன்
கட்டடப் பொருட்கள்,
விவசாய உள்ளீடுகள்,
தொலைத் தொடர்பு, பக்ஸ் வசதிகள்,
உள்ளூர் வங்கிச் சேவை,
மற்றும் பல சேவைகள் எம் கூட்டுறவில்
உங்களுக்காக,

(சி-267)

## உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## நீண்ட தூரமாயினும் நிதானத்துடன் செல்வோம்!

ஒஸ்லோவில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட. கிழக்குப் பகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளின் முன்னெடுப்புப் பற்றியும், போர் நிறுத்தத்தை இன்னமும் செம்மையாக்குதல் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக்குடியமர்த்துதல் போன்ற விடயங்களோடு - இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினை நோக்கியதான ஆராய்வுகளின் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வுக்கான ஆய்வுகளும், கலந்துரையாடல்களும் - தற்போதைக்கு ஆரம்பிக்கப்படமாட்டாதென இருந்த நிலையில் - இந்த ஆராய்வும், பரிசீலனையும் எதிர்பார்க்கப்படாததொன்றாக உள்ளது ஒருபுறமிருக்க -

அரசியல் தீர்வை நோக்கிய ஆய்வுகளின் அல்லது பரிசீலனைகளின் அடிப்படை பற்றிய உறுதியும் தெளிவும் முக்கியமானதாகின்றது.

இந்த வகையில் - விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து வெளியாகியுள்ள கருத்துக்கள், எதிர்பார்க்கப்படும் தீர்வுக்கான அடிப்படைத் தளமொன்றை மிக உறுதியானதாகவும், தெளிவானதாகவும் முன்வைத்திருக்கின்றன.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையிலிருந்து - இந்த அடித்தளம், உலகின் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே - அரசியல் தீர்வுக்கான பரிசீலிப்புக்களின் விடயத்தில், விடுதலைப் புலிகளின் தரப்பு - மிகத் தெளிவாகவும், அர்த்தமுடையதாகவும் தனது நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளதென்றே கூறலாம்.

ஒஸ்லோவில் - கனடா நாட்டின் சமஷ்டி பற்றிய அரசியலமைப்பை ஆராய்வுக்குட்படுத்திய பின்னர் கருத்து வெளியிட்ட - விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - கூறியது இதனை வெளிக்காட்டப் போதுமானதாகும்.

தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் - குறிப்பிட்ட சுயநிர்ணய அடிப்படையிலேயே, அரசியல் தீர்வுக்கான இறுதி வடிவம் அமைய முடியுமென வலியுறுத்தியுள்ளார்.

கனடா தவிர - ஏனைய எந்த நாடுகளினதும் சமஷ்டி, சுயநிர்ணயம், சுயாட்சி பற்றிய மாதிரிகளைப் பரிசீலனைகளுக்குட்படுத்தும்போதும்,

அதனை எமக்கேற்றதாக உள்வாங்குவதற்கு, மிகச் சிறந்ததோர் எதிர்பார்ப்புநிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவே தலைவரின் மாவீரர் தின உரை அமைந்திருக்கின்றது.

இந்த இலக்கினை நோக்கி மிகவும் ஆழமான, தீவிரமான ஆய்வுப்பணிகள் தேவையாகவுள்ளன.

எமக்கான தகுந்ததோர், நீதியான, நிரந்தரமான தீர்வொன்றினை நோக்கி நகர்வதற்கு நீண்ட ஆலோசனைகளும், கலந்துரையாடல்களும் மிக அவசியமானவை.

இதற்கான பாதை வெகு சுலபமானதாகவோ, விவாதங்களற்றதாகவோ, முரண்பாடுகளற்றதாகவோ அமைந்துவிடப் போவதுமில்லை.

எனவே - விடுதலைப் புலிகளின் தலைவர் தமது உரையில் குறிப்பிடுவது போல -

எவ்வித நிபந்தனைகளும், நிர்ப்பந்தங்களும் இன்றி, வரம்புகள் வரையறைகளின்றி, காலக்கட்டாயமின்றி சுதந்திரமாகப் பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டுமென்றும்,

அவசரமின்றி, நிதானமாகத் தமிழ் மக்களின் அரசியல் தகைமைகளையும் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பதான அரசியல் உரிமையை நோக்கிச் செல்வதுமே சாலச் சிறந்ததாக அமையும்.

அவ்வாறானதொரு நிலைப்பாட்டையே சர்வதேசத்திடமிருந்தும், அரசாங்கத் தரப்பிடமிருந்தும் தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# அவுஸ்திரேலியா, ஜேர்மனி, சுவிஸ் சமஷ்டி முறைகளும் ஆராயப்படும்!

## அமைச்சர் பீரிஸ் தகவல்



(ஒஸ்லோ)

கனடாவின் கியூபெக் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள சுயாட்சி உரிமைகள் குறித்து ஆராயப்பட்டுள்ள நிலையில்- அடுத்துவரும் பேச்சுக்களில் அவுஸ்திரேலிய, ஜேர்மனிய, சுவிஸ்லாந்து, இந்திய சமஷ்டி முறைமைகள் குறித்து ஆராயப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் இப்போது அதிகாரப்பரவலாக்கல், புதிய ஆட்சிமுறை குறித்தே ஆராயப்படுகின்றன. இதில் இருதரப்பும் இணைந்தே வரையறைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றோம்.

வேறுபட்ட மக்களின் வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றக்கூடிய அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றையே தயாரிக்க முயற்சிக்கின்றோம்.

எவ்வாறான கட்டமைப்பில் எவ்வாறான பொறி முறைகளைக் கொண்டு அதிகாரப் பரவலாக்கம் செய்வது என்பதே இன்றுள்ள முக்கியமான பிரச்சினை எனவும் தெரிவித்த அமைச்சர் பீரிஸ்,

ஒஸ்லோவில் நடைபெற்று வரும் பேச்சுக்களில் மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மாட்டின் கடமையாற்றுவார் எனவும் தெரிவித்தார்.

# எட்டு சமுர்த்தி வங்கிகள் ஜனவரியில் திறக்கப்படும்!

(மானிப்பாய்)

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி யாழ். மாவட்டத்திலுள்ள எட்டு இடங்களில் சமுர்த்தி வங்கிகள் திறக்கப்படவுள்ளன.

இதற்குப் பொருத்தமான கட்டடங்களை, சம்பந்தப்பட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் தெரிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட, சமுர்த்தி வங்கியில் பணிபுரியவிருக்கும் அலுவலர்களுக்குத் தற்போது கொழும்பில் விஷேட பயிற்சிக் கருத்தரங்கு வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிகள் யாவும் முடிவடைந்ததும், இவர்கள் வங்கிகளில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

அதேவேளை, சமுர்த்தி வங்கிகளில் பணியாற்றும்போது இவர்களுக்கு விஷேட, மேலதிகக் கொடுப்பனவுகளோ, சம்பள உயர்வுகளோ வழங்கப்படமாட்டாது எனவும், தற்போது சமுர்த்தி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வேதனமே, சமுர்த்தி வங்கி அலுவலர்களுக்கும் வழங்கப்படுமென யாழ். செயலகம் அறிவித்துள்ளது. (100)

மேலும் இரு நுண்கருத்திட்டங்கள்

# யாழில் பெண்களுக்கான விடுதி யூ.என்.எச்.சி.ஆர். உதவி வழங்கும்!


(அரியாலை)

யாழ்.செயலகத்தில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற யூ.என்.எச்.சி.ஆரின் மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் மேலும் இரு நுண்கருத் திட்டங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தெல்லிப்பளை மனநோயாளர் வைத்தியசாலைக் கட்டடம் திருத்தவும் வைத்திய உதவியாளர்களுக்கான மூன்று மாதக் கொடுப்பனவை வழங்குவதற்குமாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் செலவிடப்படும்.

யாழ்ப்பாணத்தில் பெண்களின் நலன்களைப் பேணுவதற்காக பொது விடுதி அமைப்பதற்குக் கட்டடம் ஒன்றைக் குத்தகைக்கு எடுத்து - அதனைத் திருத்தவும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுக்கும், அதோடு சம்பந்தப்பட்ட ஆளணிக்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்குமாக 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (55)

# ஜோன் அமரதுங்கவிடம் இருந்து பொலிஸ் திணைக்களம் பறிக்கப்படும்



## அனுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடமிருந்து பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீளப்பொறுப்பேற்கும் நிலை ஏற்படலாம் என அனுரா பண்டாரநாயக்க எச்சரித்துள்ளார்.

அண்மையில் ஜா-எலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் ஆட்சியில் வன்செயல்கள் அதிகரித்துள்ளன. பொ.ஜ.ஐக்கிய முன்னணியினர் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவற்றுக்கு எதிராக அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்காதுவிட்டால், பொலிஸ் திணைக்களத்தை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஜனாதிபதிக்கு, பரந்துபட்ட அதிகாரங்களை ஜே.ஆர். உருவாக்கிய அரசியல் அமைப்புச் சட்டமே வழங்கியது. இதில் அமைச்சர்களை நியமிக்கவும், நீக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கொண்டு வந்தது எனது அம்மாவோ அப்பாவோ இல்லை. ஜே.ஆர்தான் கொண்டு வந்தார். இந்த வகையில் அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதாகவும் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# அதாவுல்லா அணியினருக்கு எதிர்க்கட்சிகள் வரவேற்பு!

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸில் பிளவினை ஏற்படுத்திய அதாவுல்லா அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் சென்றபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேசைகளைத் தட்டி ஆரவாரம் செய்து வரவேற்றுள்ளனர்.

அதாவுல்லா, ஹவ்ரத், அப்துல் காதர், நூர்தீன் மசூர் ஆகியோர் நடாளுமன்றத்துக்குச் சென்றபோதே இந்த வரவேற்புக் கொடுக்கப்பட்டது. அத்துடன் இவர்களுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாழ்த்தும் தெரிவித்தனர்.

# தென்பகுதி பத்திரிகையாளருக்குக் கிடைக்கும் வசதிகளை எமக்கும் பெற்றுத் தாருங்கள்!

## வட இலங்கைப் பத்திரிகையாளர்கள் அமைச்சரிடம் கோரிக்கை

தென்பகுதி பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்கும் வசதிகள், வட இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும் கிடைக்கத் தேவையான ஒழுங்குகளைச் செய்து தரும்படி, வட இலங்கைப் பத்திரிகையாளர்கள் அமைச்சர் மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை, வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தூதுக்குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவரது வீட்டில் சந்தித்தபோதே, மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சருடனான இச்சந்திப்பின்போது, வட இலங்கை பத்திரிகையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் - சலுகைக் கட்டணத்தில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டும் எனவும், தென்பகுதி மற்றும் நாட்டின் ஏனைய பகுதி பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்கும் அனைத்து வசதிகளும், வட இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்துடன் சங்கத்தின் அலுவலகத்திற்குத் தளபாடங்களும், உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும் எனவும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தூதுக்குழுவினர் அமைச்சர் மகேஸ்வரனிடம் கோரியுள்ளனர்.

இக்கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதாக அமைச்சர் மகேஸ்வரன் மேற்படி தூதுக்குழுவினரிடம் உறுதியளித்துள்ளார்.

# தெல்லிப்பளை வைத்தியசாலையில் அடிக்கடி மருந்துத் தட்டுப்பாடு

தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்குரிய மருந்துப் பொருட்களை, உரிய வேளையில் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து அனுப்பி வைக்காத காரணத்தால் மருந்துப் பொருட்கள் மற்றும் திரிபோஷா மா என்பவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால், நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகள் வழங்குவதில் சிரமம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. எனினும் அத்தியாவசியமான ஓரிரு மருந்துகளை அம்புலன்ஸ் வண்டியில் எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது. வாகன வசதிகளைக் கொண்ட யாழ்.வைத்தியசாலையிலிருந்து மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படாமை குறித்து மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன. (68)

# தமிழீழப் பந்து இப்போது சிங்கள மைதானத்தில்! மாற்றுத்தீர்வு தருமாறு பிரபா விடுத்த சவால்!!

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை குறித்து, 'சண்டே லீடர்' பத்திரிகையில் டி.பி.எஸ்.ஜெயராஜ் எழுதிய கட்டுரையில் இருந்து....**

அன்ரன் பாலசிங்கத்தினால் பத்திரிகையாளர் மாநாட்டில், தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களுடன் தொடர்புபட்ட கூட்டங்களில் கூறப்பட்ட கருத்துக்களின் ஒப்பீட்டு ஆய்வின்படி அவர் கூறியதன் சாராம்சம் பிரபாகரனின் மாவீரர் தினப் பேசசில் எதிரொலித்தது.

பாலசிங்கம், சட்டாஹிப் மாநாடடில் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டார் என்ற முற்றிலும் தவறான விம்பம் ஒன்றை சில ஊடகங்கள் உருவாக்கியுள்ளன.

தவறான புரிந்து கொள்ளல் மற்றும் தவறான தகவல்கள் போன்ற தேவையற்ற செயற்பாட்டில் ஈடுபட்ட பின்பு இந்தப் பிரிவினர் இப்பொழுது குழம்பிப் போயுள்ளனர். மீண்டும் ஒருமுறை இந்த ஆட்கள் விடுதலைப் புலிகள் ஊசலாடுகின்றனர் என்ற மனப்பதிவை முன்வைக்க முயற்சிக்கின்றனர். உண்மை என்னவென்றால், விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றது. அதேவேளை, சில செய்தி வட்டாரங்கள் தாங்கள் தடுமாற்றமடைந்த பின், மக்களையும் தடுமாற வைக்கின்றனர்.

தமிழ் அரசியல் போராட்டத்தின் கோட்பாட்டு அம்சங்களையும் மற்றும் விடுதலைப் புலிகளின் தற்போதைய அணுகுமுறையையும் கிரகிக்கும் திறனின்மைதான் தவறான ஊகங்களுக்கு அடிப்டைக் காரணங்களாகும்.

துன்புறுத்தல்கள் மற்றும் அடக்குமுறைகளின் கடந்தகால வரலாற்று அடிப்படையில், வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ்மக்கள் தமிழீழத் தனியரசுதான் ஒரே மறுமொழியென உணர்ந்துள்ளனர். 1977 இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பெற்ற மிகப் பெரும்பான்மையான தேர்தல் வெற்றி, இந்த மனப்பதிவைச் சுட்டிக் காட்டுகின்றது. அமைதி வழிப் போராட்டத்திற்கு எதிரான தமிழ்ப் போராளிகள் ஆயுதப் போராட்டந்தான் தமிழீழத்தை அமைப்பதற்கு உதவுமென மக்கள் உணர்கின்றனர். தமிழீழத் தனியரசு - தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக அமையும். விடுதலைப் புலிகளும் ஏனைய போராளிக் குழுக்களும் இந்தத் தமிழீழக் கோட்பாட்டிற்கு ஆதரவளித்து, அதுதான் ஒரே தீர்வு என்றும் அதை அடைவதற்கு ஆயுதப் போராட்டந்தான் ஒரே வழி என்றும் தமது போராட்டத்தை ஆரம்பித்தன.

பல்வேறு காரணங்களினால் விடுதலைப் புலிகள் இயக்கம் இப்பொழுது தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக வெளிப்பட்டுள்ளது. ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடும் அதே வேளையில், சில சந்தர்ப்பங்களில் சமாதானப் பேச்சுக்களிலும் அது ஈடுபடுகின்றது.

எந்தவொரு சிங்கள அரசாங்கமும் தமிழருடைய கோரிக்கையை அர்த்தமுள்ள முறையில் நிறைவேற்ற முடியாதென விடுதலைப் புலிகள் உணர்கின்ற அதேவேளையில், தேசிய மற்றும் சர்வதேசிய காரணிகள், சமாதான முறையில் பங்குபற்றும்படி அதனைக் கட்டாயப்படுத்துகின்றன. 1985 இல் திம்பு பேச்சுக்கள், 1987 இல் புதுடில்லி, 1989-90 இல் கொழும்பு பேச்சு, 1994-95 யாழ்ப்பாணப் பேச்சு எனத் தொடர்ந்த முயற்சிகளின் தோல்விகளுக்குப் பல்வேறு காரணங்கள் வழங்கப்பட்டன.

இப்பொழுது நோர்வேயின் உதவியுடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. போர் நிறுத்தம் ஒன்பது மாதங்களுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. பல நிலைகளில் ஓரளவு முன்னேற்றங்கள் ஈட்டப்பட்டுள்ளன. முந்திய முயற்சிகளுடன் ஒப்பிடும் பொழுது தற்போதைய சமாதான முயற்சிகள் எவ்வளவோ முன்னேறி விட்டதாகத் தோன்றுகின்றது. இந்த வெற்றிக்கான முக்கிய காரணம், சர்வதேச முயற்சிகள் நோர்வேயினால் பிரமாண்டமான முறையில் உருவகிக்கப்பட்டுள்ளன. உண்மைக்குப் புறம்பாக அதற்குப் பூசி மெழுகும் கருத்துக்களைக் கொடுக்க முடியாது, மோதலில் சம்பந்தப்பட்ட கட்சிகள் "மையக்" கருத்துக்களை இனங்காண வேண்டும். இதுதான் அடிப்படையான அரசியல் விடயமாகும். இதற்குத் தீர்வு காண அசாதாரண அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தேவையாகும்.

எத்தகைய மாயத் தோற்றங்கள் உருவாக்கப்பட்டாலும், முக்கிய விடயங்கள் திருப்திகரமாகத் தீர்க்கப்படாத வரைக்கும் நிரந்தரமான சமாதானம் சாத்தியமில்லை. இந்த முக்கிய விடயங்கள் என்ன என்பதில் சிங்கள மற்றும் தமிழ்க் கட்சிகளுக்கிடையே முரண்பாடான எண்ணக் கருக்களின் பரிமாணம் இருப்பதை உண்மை வெளிப்படுத்துகின்றது. குறைந்தளவு கோரிக்கைகளுக்கும் உச்ச அளவு சலுகைகளுக்குமிடையில் பரந்தளவு இடைவெளியைக் காணமுடிகின்றது.

இந்த நிலையில், விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழீழ நிலைப்பாட்டை மாற்றியமைக்கலாம் என எவராவது எதிர்பார்ப்பதற்கு எந்தவித அடிப்படையும் இருப்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் தோன்றவில்லை. சமாதானப் பேச்சுக்கள் நல்ல பயன்தரும் விருத்தி நிலையை அடைந்த பின்புதான், அத்தகைய நிலைப்பாடு உருவாக முடியும். முதிர்வுக்கு முன்பே தமிழீழக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிடுவார்கள் என்ற தப்பபிப்பிராயத்தைச் சில ஊடக வட்டாரங்கள் தொடர்ந்து உருவாக்குவது உண்மையாகவே ஏமாற்றமளிப்பதாகும். விடயத்தைக் கையாளுவதில் புலிகள் காலந்தாழ்த்துவதான அல்லது இந்த விடயத்தில் உள்ள கருத்து முரண்பாடு இருப்பதான மனப்பதிவை வெளிப்படுத்துவது வருத்தமூட்டுவதாகும். பிரிவினையைக் கைவிடாமல் மாற்று யோசனைகளைப் பாசீலிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள் என்பதை உணர்வதுதான் முக்கியமானதாகும்.

### சாத்தியமான மாற்றுத் திட்டங்கள்

தமிழீழத்திற்குக் குறைவான தீர்வுக்கான தேடலில் பங்குகொள்ளத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் கூறும்பொழுது, தமிழ் அரசியலில் ஒரு பரீட்சார்த்தமான நிலைப்பாடு பெரிதுபடுத்தப்படுகின்றது.

விடுதலைப் புலிகள், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி போலல்லாமல் இந்தப் பிரதான நிலைப்பாட்டை ஆயுதங்கள் மூலமாக அடைந்துவிட்டனர். அத்தோடு அரசாங்கத்திற்கு எதிராக மிக அதிகளவு சக்தி வாய்ந்த நிலையிலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியிலும் பார்க்கச் செல்வாக்கு மிக்கதாகவும் விளங்குகின்றனர். இந்தப் பலத்தின் நிலைப்பாடும் மற்றும் அதனுடைய கோட்பாடுகளின் வலுவும் தமிழீழத்திற்கு மிகவும் குறைவான விட்டுக்கொடுப் பிற்கு விடுதலைப் புலிகளை அனுமதிக்காது.



சாத்தியமான மாற்றுத் திட்டத்தைப் புலிகள் ஏற்றுக்கொள் வதற்குத் தயாராகவிருப்பது முக் கிய கோட்பாடுகளான சுயநிர்ணய உரிமை, தாயகக்கோட்பாடு மற்றும் தேசியம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அதுதான் அடிப்படைக் கோட்பாடாக அமையும்.

இந்த நிலைப்பாட்டை நேரடியாகவும், தாக்கமுள்ளதாகவும் உலகம் முழுவதற்கும் - பிரதம பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்தில் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிப்படுத்தினார். புலிகள், தமிழீழத்தைத் தொடர்ந்து வலியுறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லையெனவும் வலியுறுத்திய பாலசிங்கம் - சுயநிர்ணயம், தாயகக் கோட்பாடு, தேசியம் போன்ற மற்ற எண்ணக்கருக்களில் வேறுபட்ட மட்டங்களில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும் ஒரு வெளிப்படையான எச்சரிக்கை உள்ளது. வரப்போகும் எந்தத் தீர்விலும் இந்த மூன்று எண்ணக்கருக்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லையானால் அல்லது நெருக்குதல்கள் தொடர்ந்தால் சுயநிர்ணய உரிமையை இறுதி மாற்று வழியாகக் கொண்டு பிரிந்து செல்வர், இல்லாவிட்டால் பிரிவினைவாதப் போரை மீண்டும் ஆரம்பிப்பர். துரதிஷ்டவசமாக, ஊடகங்களில் சிலர் இந்த நிலைப்பாட்டை திரிபுபடுத்தி, விடுதலைப் புலிகள் தமிழ் ஈழத்தைக் கைவிட்டுவிட்டதாகக் கூறுகின்றனர்.

பிரபாகரனுடைய வருடாந்த உரையினூடாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சந்தேகமில்லாமல் இப்பெழுது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இலங்கையில், தமிழர் - தெளிவான தேசியம் அல்லது தேசிய வடிவமைப்புடன், தனியான மொழி, பிரதேசம் மற்றும் இன அடையாள உணர்வுடையவர்களென வாதிட்டு, அது தன்னுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமையுடைதென விடுதலைப் புலிகள் தலைவர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

தனித்துவமான மக்கள் என்ற முறையில், தமிழருக்கு சுயநிர்ணயத்தைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு. சுயநிர்ணயத்தைத் தீர்மானிக்கும் உரிமை - உள்ளக மற்றும் வெளியகம் என இரு அம்சங்களைக் கொண்டுள்ளது. சுயநிர்ணயம், மக்களுக்கு சுயாட்சியை உரித்துடையதாக்குகின்றது. தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த மண்ணில் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் அந்நிய சக்திகளின் தலையீடின்றி, தங்களுடைய வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட நிலத்தில் வாழ விரும்புகின்றனர். தங்களுடைய மொழி, பண்பாடு மற்றும் பொருளாதாரத்தை விருத்தி செய்வதைத் தொடர்ந்து தேசிய அடையாளத்தைப் பாதுகாக்க விரும்புகின்றனர். தங்களுடைய தாயகத்தில் சுயாட்சி அமைப்புடன் வாழ விரும்புகின்றனர். அதுதான் அவர்களுடைய அரசியல் அபிலாசையாகும். போதியளவு பிரதேச சுயாட்சியும், உள்ளக சுயநிர்ணயத்தைத் தீர்மானிக்கும் உரிமையுடன் கூடிய சுய - அரசாங்கத்தையும் வழங்கக்கூடிய கட்டமைப்பைச் சாதகமாகப் பரிசீலிக்க தாங்கள் தயாராகவுள்ளோம். ஆனால சுயநிர்ணயத்திற்கான மக்களின் உரிமை மறுக்கப்பட்டால் மற்றும் தங்களுடைய பிரதேச ஆட்சிக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், பிரிந்து சென்று சுதந்திரமான அரசை நிறுவுவதைத் தவிர தங்களுக்கு மாற்றுவழி எதுவுமில்லை எனப் பிரபாகரன் அறிவித்துள்ளார்.

மேலும், தொடரும்போது- சிங்கள மக்களுக்கு நேரடியாகக் கோரிக்கை விடுத்தார். தங்களுடைய சொந்தத் தாயகத்தில் சுயாட்சி அமைப்பின் கீழ் தங்களுடைய விடயங்களை நிர்வகிக்கும் தமிழருடைய அபிலாசைகளை சிங்கள மக்கள் எதிர்க்கக் கூடாது. சிங்கள மக்கள் தமிழ் மக்களுடன் சமாதானமாகக் கூடி வாழ விரும்புகின்றார்களா? அல்லது தமிழ் மக்களைப் பிரிந்து செல்லக் கட்டாயப்படுத்தப் போகிறார்களா? என்பதைச் சிங்கள தேசத்தின் அரசியல்தான் காலப்போக்கில் தீர்மானிக்க வேண்டும்.

சிங்கள இராணுவ வெற்றியில் நம்பிக்கை கொண்ட சக்திகள், தங்களுடைய சொந்த அற்ப அரசியல் காரணங்களுக்காக தங்களுடைய முயற்சியைத் தூண்டி விடுவார்களானால், தமிழ்மக்கள் - அரசியல் விடுதலைக்காகப் பிரிந்து செல்லும் பாதையைத் தொடர்வதற்குக் கட்டாயப்படுத்தப்படுவர் என அவர் எச்சரித்தார்.

### பொன்னான சந்தர்ப்பம்

அரசாங்கப் பேச்சாளரும் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் பிரபாகரனின் நிலைப்பாட்டினால் உற்சாகமடைந்துள்ளார். பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைந்து சகலதரப்பினருக்கும் ஏற்புடையதான ஒரு திருப்திகரமான அரசியலமைப்புத் தீர்வை உருவாக்க முடியுமென்பதே அவருடைய கருத்தாகத் தோன்றுகின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர் வலியுறுத்திய புலிகளின் நிலைப்பாட்டையிட்டு, பீரிஸ் மகிழ்ச்சியுறுகின்றார். இது உண்மையாக தென்பகுதி மனிதர் ஒருவரிடமிருந்து ஒரு முன்னேற்றகரமான வெளிப்பாடாகும். விடுதலைப் புலிகளின் தலைவர் விட்டுக்கொடுக்காதவராகவும், சமாதானத்திற்கு இணங்காதவராகவும், நெகிழ்ச்சித் தன்மையற்றவராகவும், என அடிக்கடி தென்னிலங்கையில் வர்ணிக்கப்படுபவர், மாறுபட்ட, ஏற்புடையதான மாற்றுத் திட்டங்களை சாதகமாகப் பரிசீலிக்க ஆயத்தமாகவுள்ளார் எனப் பதிவில் இடம்பெற்றுவிட்டார். ரணில் விக்கிரமசிங்கவின் நேர்மையிலும் தன்னுடைய நம்பிக்கையைப் பிரபாகரன் வெளிப்படுத்தியுள்ளார்.

இது ஒரு பொன்னான சந்தர்ப்பமாகும். இதைத் தவறவிடக்கூடாது. விடுதலைப் புலிகளும் மற்றும் அதன் விரிவாகத் தமிழ்மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டத்திற்கான வழிமுறைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதென்பதே சிங்கள அரசியல் வாதிகள் எதிர்கொள்ளும் தலையாய கடமையாகும். தமிழ் மக்களுடைய அபிலாசைகள் உள்ளடக்கப்படாவிட்டால், தமிழீழக் கோரிக்கை கைவிடப்படமாட்டாது. மாற்று யோசனை உருவாக்கப்பட வேண்டுமானால், அடிப்படைக் கோட்பாடுகளான தாயக் கோட்பாடு, தேசியம் மற்றும் சுயநிர்ணயம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சுயநிர்ணயத்தின் (உள்ளக) முக்கிய கோட்பாடு தமிழ் எண்ணக் கருக்களுக்கு ஏதோ புறம்பான ஒன்றல்ல. அது தமிழ்மக்களின் உள்ளார்ந்த உரிமையாக நோக்கப்படுகின்றதேயன்றி விளம்பரத்திற்கான சலுகையாக அல்ல. சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கிய சுய ஆதிக்கப் பிரதேசத்தில் சுய ஆட்சியுரிமையுடன் கூடிய சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் ஏற்புடையதான தீர்வைச் செய்து முடிப்பதுதான் கையிலுள்ள தவிர்க்கமுடியாத பணியாகும். இந்த விடயங்கள் எழுத்து மூலம் தரப்பட வேண்டியதே. வெளிப்பகட்டுப் பூச்சு செய்யப்படக்கூடியவையல்ல. காலவரையறையின்றிப் புறக்கணிக்கப்படவோ அல்லது ஒத்திவைக்கப்படவோ கூடாது. மற்றும் இந்த விடயங்கள் தீர்வு காணப்பட்டு, அடிப்படையான மீள்கட்டமைப்பு உருவாக்கப்படும்வரை, உண்மையாகவே - இறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வுக்கான எதிர்பார்ப்புக்கள் பிரகாசமற்றவையாகவே இருக்கும்.

### சிங்கள மைதானத்தில் தமிழீழப் பந்து

ஆகையால், பிரபாகரன் என்ன செய்துள்ளார் என்றால், சிங்கள மக்களுக்கும் மற்றும் அவர்களுடைய அரசியல் தலைவர்களுக்கும் ஒரு சவாலை வீசி எறிந்துள்ளார். மாற்றுத் தீர்வொன்றை வழங்கும்படி அவர் கோரியுள்ளார். தமிழீழத்திற்கான மாற்றுத்திட்டத்தை வழங்கும் பொறுப்பு தெற்குச் சிங்கள தேசத்திடம் தரப்பட்டுள்ளது. இந்த விடயம் ஆக்கபூர்வமாக கலந்துரையாடப்படும் நாளொன்று விரைவில் உதயமாகும். ஓர் அர்த்தமுள்ள தீர்வு அடையப்படவேண்டும்.

அத்தகைய நிலைமையில் நன்கு யோசிக்கப்படவேண்டிய இரு வினாக்கள் உள்ளன. விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாரபட்சமற்ற தீர்வொன்றை வெளிக்கொணரும் திறன் சிங்கள மக்களுக்கு உண்டா? என்பது ஒன்று. மற்றது - அத்தகைய தீர்வொன்று உருப்பெறுவதை அங்கீகரிக்கும் மனச்சாட்சி சிங்கள மக்களுக்கு உண்டா? என்பதாகும். அப்பொழுது மாத்திரந்தான் தமிழீழக் கோரிக்கை முற்றாகக் கைவிடப்படும் என எதிர்பார்க்கலாம். இப்பொழுது தமிழீழப் பந்து சிங்கள மைதானத்தில் இருக்கின்றது.

*தமிழாக்கம்: செ.சிவசம்பு.*

# இனம் தெரியாத காய்ச்சல் பரவுகிறது சிகிச்சைக்காக நோயாளர் படையெடுப்பு

## வைத்தியசாலைகளில் வசதிகளில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இனம்புரியாத காய்ச்சல் பரவி வருவதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கான நோயாளிகள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலையில், இடநெருக்கடியால் நோயாளர்கள் நிலத்தில் படுக்க விடப்பட்டுள்ளனர்.

யாழ்.குடாநாடு முழுவதும் பரவி வரும் சாதாரண காய்ச்சல், மலேரியா காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட பெருமளவான மக்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருவதாக போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிலருக்கு மலேரியா காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருந்து வருகின்றபோதிலும், இரத்தப்பரிசோதனையின்போது மலேரியா நோய்க்கான அறிகுறிகள் எதுவும் இல்லை எனத் தெரியவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவருக்கு மலேரியா மாத்திரைகளை வழங்க, காய்ச்சல் குணமடைவதாகவும் தெரியவருகிறது.

அதேவேளை - வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் பெருமளவிலானோர் சிகிச்சைக்காக வருவதாகவும் வெளிநோயாளர் பிரிவுகளிலிருந்து தெரியவருகின்றது.

(ச)

# தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



யாழ்.வந்த தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவரும், 'நமது ஈழநாடு' நிர்வாகப்பணிப்பாளர் சிவமகாராஜாவும் படத்தில் காணப்படுகின்றனர்.

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவரும் கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் தலைவருமாகிய லயனல் சமரசிங்க நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

இன்று நடைபெறவுள்ள கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் சிரார்த்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையுடன் இணைந்து குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் கூட்டுறவுச் சேவைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்காகவே, யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள இவர், யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பலதரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளார்.

# ஓய்வூதிய நிலுவைகள் இம்மாதம் வழங்கப்படும்

(கொழும்பு)

ஒரு இலட்சம் ஓய்வூதியர்களுக்கு நிலுவைகளை வழங்குவதற்குத் திறைசேரி நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக 1500 மில்லியன் ரூபா ஓய்வூதியத் திணைக்களம் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் ஓய்வூதிய நிலுவைகளை இம்மாதம் 31ம் திகதிக்குமுன் வழங்கி முடிக்குமாறு ஓய்வூதியத் திணைக்களப் பணியாளர் சகல பிரதேச செயலாளர்களிடமும் கேட்டுள்ளார்.

இதேவேளை - எதிர்காலத்தில் இவ்வாறான நிலுவைப் பிரச்சினைகள் இனி ஏற்படாது என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் :கா.மந்தாகினி
முகவரி:406, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------

முகவரி:-----------------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------------
பெற்றார் ஒப்பம்


## பாபாவின் அருள்வாக்கு



வீட்டில் அமைதியை கடைப்பிடியுங்கள், சமூகத்தில் அமைதியை உருவாக்குங்கள். இதற்கு மாறாக, உங்களிடம் அமைதி இல்லை என்றால், சமூகத்திலும் அமைதி இல்லாமல் செய்கிறீர்கள். ஆகவே அமைதியை முக்கிய பண்பாகக் கருதி அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணிபுரியும் ஊழியர்களுக்கான செயலமர்வு ஒன்று, இவ்வார இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனைத்துப் பகுதிகளிலும் கடைமையாற்றும் ஊழியர்களுக்கும், மனித உரிமைகள் பற்றிய பல விடயங்களும் மனித உரிமைச் சட்ட விதிகளும் இச்செயலமர்வில் போதிக்கப்படவுள்ளதுடன், மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகவும் இச்செயலமர்வில் விளக்கப்படவுள்ளது.

இச்செயலமர்வில் பல சட்ட அறிஞர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். இச்செயலமர்விற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களும் நாளை கொழும்புக்குச் செல்லவுள்ளனர்.

(லி)

## வாள் வெட்டில் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற இருவரிடையே ஏற்பட்ட கைகலப்பில் வாள்வெட்டுக்கு இலக்கான ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வேலணை பகுதியில் நடைபெற்றுள்ள சம்பவத்தில், அம்பிகை நகரைச் சேர்ந்த செல்லையா முருகநாதன் (வயது 43) என்பவரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்கானார்.

வீதியில் சென்று கொண்டிருந்த வேளை எதிரே வந்த சைக்கிள் ஒன்றுடன் மோதியதால் ஏற்பட்ட வாய்த் தகராறினை அடுத்தே இக்கைகலப்பு நடைபெற்றது என காயமடைந்தவர் தெரிவித்தார்.

(ச)

## நேசன் — எங்கே போகிறோம்...?

# எமது பிள்ளைகளின் கல்வியும் எமது கல்விச் சமூகத்தினரும்...

எமது மக்களின் தனிப்பெரும் சொத்துக்களிலொன்று அவர்களது கல்வி. எமது இளைய தலைமுறையினர் தமக்குரிய கல்வியை முறையுறப் பெற்று உயர்வின் புதிய திசைகளில் தமது பயணங்களைத் தொடர உரிய வழிமுறைகளை ஏற்படுத்தித் தருவது மூத்தவர்களின் -குறிப்பாக கல்விச் சமூகத்தினரின் தவிர்க்க இயலாப் பெரும் பொறுப்பாகும்-எமது மாணவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கடந்த கால இடப்பெயர்ச்சி மற்றும் யுத்தச் சூழல் நடைமுறைகளால் தமது கல்வியில் பல இடையூறுகள், தடங்கல்கள், இடைநிறுத்தங்கள் என்பவற்றைக் கண்டிருக்கிறார்கள்.

தற்போது, மீண்டும் அவர்களது கல்வியைத் தொடர, தடங்கலின்றி முன்னெடுக்க உரியகாலம் கனிந்திருக்கிறது. எத்தனையோ பிஞ்சுகள் தமது ஆரம்பக்கல்வியைத் தொடர இருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ பேர் தமது இடைநிலைக் கல்வியைப் புதிய பாடசாலைகளில் ஆரம்பிக்கவிருக்கிறார்கள்.

இந்த நிலையில் சில நடைமுறைச் சிக்கல்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அவைகளிலொன்று, புதிய பாடசாலையில் அனுமதி பெறுதல் தொடர்பான சிக்கலாகும் - அனுமதி வழங்கும் அரசாங்கப் பாடசாலைகள் சில அடிப்படைத் தகுதிகளை அனுமதியின் பொருட்டுக்கோருகின்றன. மாணவரின் கல்வித்திறன்-அறிவு இவை தொடர்பான மதிப்பீட்டின் பொருட்டு அந்தப் பாடசாலைகள் அனுமதிப்பரீட்சைகளை நடாத்தி ஒரு குறிப்பிட்ட தரத்துக்கு மேலான அடைவுகளைப் பெற்றோருக்கே அனுமதி வழங்குகின்றன. தத்தமக்கென அடிப்படைத்தரத்தைப் பேணும் நோக்கத்துடனான இந்தக் காரியம் நியாயப்படுத்தக் கூடியதே. பிள்ளைகளை அத்தகைய அடைவுகளைப் பெறும் வகையில் தயார் செய்து அனுப்ப வேண்டியது பெற்றோரின் கடமையுமாகும். எதையெடுத்துக் கொண்டாலும் ஒரு போட்டிச் சூழல் உருவாகிவிடுவதும் முண்டியடித்து முன்னுக்குச் செல்பவருக்கே வாய்ப்புக்கள் கிடைப்பது, 'கல்வி பெறுதல்' தொடர்பாகவும் காணப்படுவது ஒரு வகையில் துக்ககரமானது தான். பாடசாலைகளின் தரம் பேணுதல் -(கல்வித்தரம்) மாணவர்களின் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பாகப் புதிய அணுகுமுறைகளை அறிமுகம் செய்தாலன்றி இத்தகைய போட்டிச் சூழலுக்கு முகந்தருவது தவிர்க்க இயலாத ஒன்றாகவே இருக்கமுடியும்.

இது ஒரு புறமிருக்க, அனுமதி கோரும் மாணவர்கள் தாம் படிக்க விரும்பும் அரசாங்கப் பாடசாலையொன்றை நாடும்போது ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை அனுமதிக்காக வழங்க வேண்டியிருப்பது மிகவும் சங்கடமான விஷயமாக இருக்கிறது.

தனியார் பாடசாலைகள் அனுமதிக்காகப் பணம் அறவிடுவது வேறு விடயம். அதுவே நடைமுறையுமாகும்.

அரச பாடசாலைகளில் அனுமதி கோரும்போது- அடிப்படைத்தகுதிகள் இருந்தும் கூட கட்டணம் செலுத்தவில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுவது ஒரு வகையிலும் நியாயமாகாது. - 'எல்லோருக்கும் கல்வி' வலியுறுத்தப்படும் ஒரு நாட்டில் இலவசக்கல்வி முறை அமுலில் இருக்கும் ஒரு நாட்டில்- கல்வியின் முக்கியத்துவம் கருதி- மாணவர்கள் கல்வியபிவிருத்தி கருதி இலவச நூல்கள் வழங்கப்படும் நாட்டில்- திறமையும் தகுதியும் கொண்ட ஒரு மாணவன் அரசாங்கப் பாடசாலையொன்றில்- தேசிய பாடசாலையொன்றில் அனுமதி பெறமுடியாதிருப்பது எந்த வகையில் நியாயமாகும்? பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் கல்வி முன்னேற்றத்துக்குத் தடையாகிவிடக் கூடாது என்பதால்தானே இலவசக் கல்வி முறையே அறிமுகமானது.

இந்த நிலையில் எமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு எம்மவர்களே தடையாக அமையலாமா? - 'செல்வாக்கு' காரணமாக தகுதியில்லாத ஒரு மாணவன் அனுமதி பெறும் அதேவேளை, செல்வாக்கும் பணபலமும் இல்லாத காரணத்தால் ஒரு மாணவன் அனுமதி பெறத் தவறுவது, அதுவும் எமது மண்ணிலேயே அத்தகைய நிலை உருவாகுவது எவ்வளவு துயரமான விடயம்?

இது பற்றிச் சம்பந்தப்பட்ட துறையினர் கவனம் கொள்வார்களா?

கடந்த காலங்களில் எத்தனையோ சங்கடமான சூழல்களில், கல்வியில் பெரும் தடங்கல்களை எதிர்கொண்ட நமது பிள்ளைகள், இப்போதுதான் ஒரு சுமுகமான அமைதியான சூழலில் சிறந்த கல்வியைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் - இந்தச் சமயத்தில் அரசாங்கப் பாடசாலைகளில்- நல்ல தரத்திலுள்ள பாடசாலைகளில் கல்வியை மேற்கொள்ள விரும்பும் அவர்களின் நன்நோக்கத்துக்கோ, நியாயமான விருப்புக்கோ எதுவிதத்திலும் நமது உள்ளூர்ப் பாடசாலைகள் தடையாகிவிடக் கூடாது. உதவிபுரிந்து ஒத்தாசை புரிய வேண்டிய தரப்பினரே- தடைசெய்து, வாய்ப்பைப் பறித்து விடமுனைவது மிகவும் தவறான காரியமாகும்.

இவ்வாறு நன்கொடையோ, அனுமதிக்கான கட்டணமோ கேட்கப்படுவதற்குப் பாடசாலையின் அபிவிருத்தியின் பொருட்டு என்னுமோர் காரணம் காட்டப்படுவதுண்டு - பல குறைபாடுகள் பாடசாலையில் உண்டு. அவற்றை நிவர்த்தி செய்வதற்குத் திணைக்களத்தை எல்லாச் சந்தர்ப்பத்திலும் எதிர்பார்க்க முடியாது. இப்படியான சந்தர்ப்பத்தில் பெற்றோர் புரிந்து கொண்டு ஒத்துழைப்பதன் மூலமே இத்தகைய பாடசாலையின் தேவைகள்- உதாரணத்துக்குத் தளபாடப் பற்றாக்குறை அல்லது ஒரு பெரிய திருப்பணி நிறைவேற்றப்படமுடியும் என்று ஒரு காரணம் முன் வைக்கப்படுவதுண்டு.

இது வரை காலமும் நிலவிய சூழலில் அத்தகைய காரணமும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாக இருந்துள்ளது. ஆனால் தற்போது நிலைமை மாறிய சூழலில், பொருளாதாரச் சூழல் பின்தங்கியுள்ளவர்களது கல்வித் தேவைக்கு முன்னிடம் கொடுத்து அவர்களது கோரிக்கையைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது ஒரு நல்ல அணுகுமுறையாக இருக்கும்- எமது பிள்ளைகளின் சொத்தாக எண்ணிக் கொள்ளக்கூடிய கல்விச் செல்வத்தை தேடிக்கொள்ளும் வாய்ப்பைத் தங்கு தடையின்றி வழங்க வேண்டிய காலம் இதுவாகும்- எதிர்காலம் ஒரு வளமான சந்ததியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அந்தச் சந்ததியை உருவாக்குவதற்கான பெரும் பாதையில் முழுமனதோடு ஈடுபட வேண்டிய கடப்பாடு எமது கல்விச் சமூகத்தினருக்கு உண்டு என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்களா?

நாம் எங்கே போகிறோம்...?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஹெல்கிசனின் மறைந்த தாயாருக்கு பேச்சினிடையே மௌன அஞ்சலி

(ஒஸ்லோ)

கடந்த சனிக்கிழமையன்று மரணமான நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனின் தாயாருக்கு ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சுக்களின்போது ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புற்றுநோய் காரணமாக ஹெல்கிசனின் தாயார் மரணமானார். உடனடியாக வீட்டுக்குச் சென்ற ஹெல்கிசனிடம், அவரது தந்தையார் மற்றும் உறவினர்கள் "உனக்கு முக்கியமான கடமைகள் காத்திருக்கின்றன'' என்றும் இறுதிக் கிரியைகளை தாம் கவனிப்பதாகவும் கூறி அனுப்பி வைத்தனர்.

விதார் ஹெல்கிசன் சமாதானப் பேச்சுக்களுக்கு பிரதான ஏற்பாட்டாளராகக் கலந்து கொள்கிறார். இவருக்கு இப்போது வயது 34 ஆகும். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்ற இவர் ஒஸ்லோ தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





நோர்வே வெளிவிவகார அமைச்சர் நேற்று வழங்கிய மதிய போசன விருந்தில் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, பாலா, தமிழ்ச்செல்வன் மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் ஆகியோரை முதலாவது படத்திலும், அமைச்சர் பீரிஸ், நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன், பாலா ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## அரசு - புலிகளுக்கு நோர்வே அமைச்சர் மதியபோசன விருந்து

(ஒஸ்லோ)

அரச- புலிகள் தரப்புப்பிரதிநிதிகள் குழுவினருக்கு நேற்று நண்பகல் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் மதியபோசன விருந்து அளித்தார்.

ஹோட்டல் கொன்டினன்டலில் நடைபெற்ற இந்த மதிய போசன விருந்தில் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அரச தரப்பில் - அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரும் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் சமாதானச் செயலகத்தலைவர் பேணாட் குணதிலகவும் இடம்பெற்றிருந்தனர்.

புலிகளின் தரப்பில் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அனைவரும் இம்மதிய போசன வைபவத்தில் கலந்து கொண்டனர். இது மகிழ்ச்சிகரமானதாக அமைந்ததாக இருதரப்பினரும் குறிப்பிட்டனர்.

## பாதுகாப்பு...

யனை பாதுகாப்பு உபகுழுவுக்கு நியமித்துள்ளது. அரசதரப்பில் இடம் பெறவுள்ளவரின் பெயர் இதுவரை வெளியிடப்படவில்லை.

பொதுமக்களின் பிரச்சினைகளை வேகமாக இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு ஒஸ்லோவில் நடந்த நேற்றைய பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டதுடன், உபகுழுவையும் மேலும் வலுப்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

அதேவேளை -

புனரமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைக்கான உபகுழுவின் செயற்பாடுகள் பற்றியும் நேற்றைய பேச்சுக்களில் சில விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## 11 லட்சம்....

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

'ஒட்டாவா' உடன்படிக்கையில் கையெழுத்திடுவதென்பது மிகவும் உணர்வுமயமான விடயம். பேச்சுக்கள் நடைபெறும் நேரத்தில் இவ்வாறான கோரிக்கை எழுவது முக்கியமானது.

'ஒட்டாவா' உடன்படிக்கையில் கையெழுத்திடுவது பற்றி ஆலோசிக்கப்பட வேண்டும். அரசு அதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

மனுவைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் -

பேச்சுவார்த்தையில் கண்ணிவெடிகள் அகற்றுவது மிகமுக்கியமான விடயம். மக்களை மீளக்குடியமர்த்த இது மிகவும் தேவையானது.

சிவில் அமைப்புக்கள் இத்தகைய விழிப்புணர்வில் ஈடுபடுவதை நாம் வரவேற்கின்றோம்.

'ஒட்டாவா' உடன்படிக்கையில் கையெழுத்திடுவது பற்றி தற்போதும் பேசிவருகின்றோம். தொடர்ந்தும் இதுபற்றி அரசாங்கம் ஆராயும் என்றார்.

## மூன்றாவது நாளாக நேற்று செயலகம் முன்பாக மறியல்

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர், காணாமல் போன தமது உறவுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்தக் கோரி யாழ்.அரச செயலகத்தின் முன் நடாத்திவரும் மறியல் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இதனால் நேற்றும் யாழ். அரச செயலகம் இயங்கவில்லை.

இதேவேளை, யாழ் அரச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணமாற் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை, நேற்று கொழும்பிலிருந்து திரும்பிய அரச அதிபர் செ.பத்மநாதன் இன்று காலை சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார்.

## புனரமைப்புக்கு முன்னேற்பாடாக செல்வினும் ஒஸ்லோவில்

(கொழும்பு)

வட. - கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திச் செயலகப் பணிப்பாளராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் செல்வினும் ஒஸ்லோவுக்கு பயணமாகியுள்ளார்.

வட. - கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகவே செல்வின் ஒஸ்லோவுக்குச் சென்றுள்ளார்.

அரச அதிகாரிகளுடன் சென்றுள்ள இவர், எதிர்வரும் ஒன்பதாம் திகதி அக் குழுவினருடன் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இக்குழுவினர் நாடு திரும்பியதும் வட. - கிழக்கிற்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைக்கான செயலகம் கிளிநொச்சியில் முழுமையாக செயற்பட ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்!

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூகசேவைப் பணிப்பாளர் எட் வேட் ஹொக் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு பணிகள் தொடர்பாக நிலைமைகளை நேரில் பார்வையிட்டு ஆராய்வதற்காகவே இவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். இவருடன் இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ஜோன் கூரியும் இன்று வருகை தரவுள்ளார்.

இக்குழுவினர், இன்று யாழ். அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர். யாழ். மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தி மற்றும் குடிநீர் விநியோகத் திட்டங்களை நடைமுறைப்படுத்து சம்பந்தமாக இப்பேச்சுக்களின்போது ஆராயப்படவுள்ளது. யாழ்.பல்கலைக்கழகம் உட்பட மேலும் பல பகுதிகளுக்கும் இக்குழுவினர் சென்று நிலைமைகளை ஆராயவுள்ளனர். (க,லி)

## இன்று நள்ளிரவுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம்!

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இன்று நள்ளிரவுடன் ஜனாதிபதி வசம் வருகின்றது. கடந்த வருடம் நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு இன்றுடன் ஒரு வருமம் பூர்த்தியாகின்றது.

நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒருவருடம் வரை அதைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. தற்போது ஆட்சியிலுள்ள ஐ.தே.முக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பலத்த முரண்பாடுகள் தோன்றியுள்ள நிலையில் நாடாளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்படுமா என அரசியல் வட்டாரங்களில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இதேவேளை,

ஜே.வி.பியும் பொ.ஐ.முன்னணியும் - இணைந்த செயற்திட்டம் ஒன்றை நாளை 6ம் திகதி வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளன. இது அரசியல் நகர்வில் முக்கிய கட்டம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் செயல் திட்டம் குறித்து விளக்குவதற்காக ஜனாதிபதி சந்திரிகா நாளை தொலைக்காட்சி மூலம் விசேட உரையை நிகழ்த்தலாம் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.31 | 96.76 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.98 | 152.30 |
| 1 யூரோ | 95.84 | 96.94 |
| 1 சுவிஸ் பிராங் | 65.02 | 66.03 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.53 | 54.50 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.78 | 25.78 |

## மரண அறிவித்தல்

### சூசை செபமாலை

இளவாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சூசை செபமாலை 4.12.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் பியன்வெனு (ஆசிரியர், இளவாலை கன்னியர் மடம் ம.வி), நிர்மலா, ஜெயமலா, வசந்தம், பீற்றர் ஜஸ்ரின் (கொள்வனவு முகாமையாளர், அக்கராயன் ப.நோ.கூ. சங்கம்), ஜொபித்தா, உதயன் (டோகா), ஜயந்தன் ஆகியோரின் தந்தையும் மரியகொறற்றி (அதிபர், பெரிய விளான் றோ.க.த.பாடசாலை), பெனடிக்ற், இம்மனுவேல், எட்வேட் ஆகியோரின் மாமனாரும் றோய், ஜோய், வோல்ரன், றெவின்ரன், றொசின்ரன், மருஷனா, ஜெனோயன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 5.12.2002 பி.ப.4.00 மணிக்கு புனித யூதாததேயு ஆலய திருப்பலியின்பின் நல்லடக்கத்திற்காக புனித யூதாததேயு சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
செ.பீ.பியன்வெனு
(மகன்)

இளவாலை மேற்கு
இளவாலை

(சி-277)

வலி.மேற்கு வாழ் ஆங்கிலப் பிரியர்களுக்கு
ஓர் இன்ப அதிர்ச்சி!

அழகு தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்கும் கலையின் காரணமாக மக்களின் மனங்களைக் கவர்ந்த "English Academy" 07.12.2002 முதல் சித்தங்கேணியிலும் (பாரதி கல்வி நிலையத்திற்கு முன்) தனது பாதங்களைப் பதிக்கவுள்ளது.

மாணவமணிகளின் மனங்களில் குடிகொண்டுள்ள "ஆங்கிலம்'' என்ற அச்சத்தை அகற்றி, அதில் அடைவு மட்டத்தை உயர்த்துவதே எமது தலையாய நோக்கம். இதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் அவாவுடன் எதிர்பார்ப்பதுடன் பெறுமதிமிக்க விமர்சனங்களையும் மனமுவந்து வரவேற்கின்றோம்.

தரம் 6 முதல் A/L, பல்கலை மற்றும் அலுவலர் வரை காலை 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

English Academy
E.Mail: thangan 672002 @ Yahoo. Com
T.P 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சித்தங்கேணி

Director
S.சிவச்செல்வன்

Teacher
K.T.ராஜா (SS)

Why Fear! We are here! யாமிருக்கப் பயமேன் (சி-252)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.